மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram Fortnightly Jan-1-15-2012

விலை: ரூ.7/- இல்லம்:2 சுற்றம்:1 ஆசிரியர் விசவனூர். வே. தளபதி



விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை.

சஞ்சீவி பர்வதத்தின் சாரல் - காவியம்.


கொங்காணி, கோந்தைப் பந்து - சிறுகதைகள்.

விசம் விலையேறுகிறது - கவிதை



SEVEN STAR STANDARD
FILMS
Seven Star GK
நடிக்கும்
தேனி மாவட்டம்
dts
தயாரிப்பு
கோபால்கந்தன்(G.K)
இணை தயாரிப்பு
கவிதா கந்தன்
கதை திரைக்கதை வசனம்
பாடல்கள் இயக்கம்
P.R.கௌமாரிமுத்து
ஒளிப்பதிவு D.மகிபாலன் இசை கிங்ஸ்லி வின்ஸென்ட்
ஜான்பாபு பவர்பாஸ்ட் P.T.பரமசிவம் G.B.வெங்கடேஸ் P.R.மூர்த்தி Stills லோகநாதன் PRO.விஜயமுரளி சத்யாலேப்

வாழ்க தமிழ்!



அனைவருக்கும் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகள்!

கடந்த ஆண்டு இறுதியில் வந்து சென்ற தானே புயல், பல சோகங்களை தமிழர்களுக்குத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறது. கடலூர், புதுச்சேரி, சென்னை, சிதம்பரம் போன்ற இடங்களில் அப்புயலின் கோரத் தாண்டவ அடிச்சுவடுகள் இன்னும் அழியவில்லை. குறிப்பாக கடலூர்



பெருமளவு பாதிக்கப்பட்டுவிட்டது என்பதை நாம் அறிய முடிகிறது. ஈடுசெய்ய முடியாத உயிரிழப்புகளும் நிகழ்ந்துள்ளன. மின்சாரமும், குடிதண்ணீரும் கிடைத்த பாடில்லை. நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்றாலும், அழிவுகள் அதிகம் என்பதால் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை என்றே சொல்லலாம்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட, நிவாரணம் அளிக்க இன்னும் நடுவண் அரசு எவ்வித செயல்பாடுகளிலும் இறங்கவில்லை என்ற நிலையை எண்ணுகிறபோது வேதனையாக உள்ளது. ஒரு இயற்கைப் பேரழிவு தமிழர்களை வதைத்துச் சென்றிருக்கிறது, அதைப்பற்றி கவலைப்படாது, மக்களின் துயர் தீர்க்க நடவடிக்கை எடுக்காது காலம் தாழ்த்துவது சரியானதல்ல. புயல் தாக்கி பத்து பதினைந்து நாட்களுக்குப் பின் நடுவண் அரசின் குழு தமிழகம் வந்து பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு அழிவுகளின் அளவை மதிப்பிடுமானால், அதிலே உண்மையான அழிவு விபரம் இருக்குமா?



வீட்டின் கூரையை, தானே புயலுக்குப் பறிகொடுத்த ஏழைக்குடும்பம் அதுவரை கூரை இல்லாத நான்கு சுற்றுச் சுவர்களுக்குள் வாழ்ந்திட முடியுமா என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

சரியான அரசு, சரியான நடவடிக்கை என்றால், புயல் ஓய்ந்த அன்றோ, அதற்கு மறுநாளோ நடுவண் அரசின், இடர் மதிப்பீட்டுக் குழு வந்திருக்க வேண்டும். காலம் தாழ்த்துவதால் மக்களின் இழப்பு நிச்சயமாக குறைத்தே மதிப்பிடப்படும். குடிமக்களின் வாழ்வாதார பிரச்னையை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இம்மாதிரியான இயற்கையின் சீற்றங்கள் நாட்டில் எங்கு ஏற்பட்டாலும், நடுவண் அரசு உடனே தக்க நடவடிக்கைகளை எடுத்து, இயல்பு நிலைக்கு மக்களைக் கொண்டு வரவேண்டும். அப்படிப்பட்ட அரசே மக்கள் நலம் பேணும் அரசாக மக்களால் கருதப்படும். இல்லையேல் அவ்வரசுக்கு அழிவு வந்து சேரும். அரசு அதிகாரம் என்பது, மக்கள் தந்த பொறுப்பு என்பதை அரசுகள் எப்போதும் நினைவில் நிறுத்துவது நல்லது.

ஆசிரியர்.

# முல்லைப் பெரியாறு.

முல்லை என்ற சொல்லை
முழுமையாய்ச் சொல்ல
மொழி வளமில்லா
மலையாளிகள்
முல்லையை அழிக்க
மல்லுக்கு நிற்கிறார்கள்.



இறையாண்மை பேசும்
இந்தியாவோ
அடித்துக்கொள்ளுங்கள்
எனக்கென்ன என்கிறது.

தமிழனை நேர்நின்று எதிர்க்க
தரணியில் யாருக்கு துணிவுண்டு?
ஏழெட்டாய் வந்து
ஏமாற்றிக் கொல்லத்தான்
தெரியும்
சில இழி பிறவிகளுக்கு.

டெல்லி அதிகாரத்தில்
நாம் என்ற மமதையில்
மலையாளிகள்
மதிமயங்கினால்,
அழிவு மதிமயங்கியவர்களுக்குதான்.

கவிஞர். வெய்யோன்.

# அப்பன் தானே நீங்க!

சிறுவயது முதலே இடதுசாரிக் கருத்துக்களைச் சுமந்து வந்தது ராசுவின் மனம். எதிலும் புரட்சி என்ற மனநிலைதான் அவருக்கு. அந்த நினைவிலேயே வளர்ந்தார். குடும்பம் வசதி என்று சொல்லமுடியாத குடும்பம்.

பள்ளிப்படிப்பை முடித்த ராசு, மேலும் படிக்க வசதி இல்லாத நிலையில் பாதிரியாராகப் போய்விட்டால் இன்னும் அதிகம் படிக்கலாம் என்று நண்பர்கள் கூறியதை ஏற்று, பாதிரிக்கு படிக்கச் சென்றார். படித்தார், பாதிரிப்பணிக்காக மட்டுமல்ல, எல்லாவற்றையும் படித்தார். என்றாலும் அவரது தாகம் அடங்கவில்லை. மேற்படிப்புகள் என்று பல படிப்புகளை தாய்நாட்டிலும், அயல்நாடுகளிலும் படித்தார்.

ராசு பாதிரியாருக்கு ஒரு கடற்சார்ந்த கிராமத்தில் பணிசெய்யச் சொல்லி ஆணை வந்தது பேராயத்திலிருந்து. பாதிரியார் பணிக்காக அவ்வூர் சென்றார் ராசு. மக்களெல்லாம் வெளிப்படையாக இருந்தனர். வெள்ளந்தி மனிதாகள் என்றால் அவர்கள்தான்.

பாதிரியார் சிறுவயதுக்காரர் என்றாலும், அவ்வூர்க்காரர்கள் ராசுவை, ஆண்டவனுக்கு அடுத்த இடத்தில் வைத்துதான் மதித்தனர். “சாமி சொல்லிட்டா மறுப்பேதுங்க” என்று சொல்வது அவர்களது இயல்பாக இருந்தது மட்டுமல்ல, சாமி சொல்படிதான் நடந்துகொண்டனர்.

இளவயது ராசுவோ, மக்களோடு மக்களாகவே வாழ்ந்தார். பூசை நேரத்தைத் தவிர, தனது பங்கு மக்களுக்கு, தான் எது செய்தால் நன்மையாக இருக்கும் என்ற சிந்தனையிலும், அந்த நன்மைகளைச் செய்வதிலும் தனது காலங்களைப் பயனுள்ளதாக்கினார்.

நாட்கள் கடந்தது, ஒருநாள் ஒரு

நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு மீனவர் ராகுவைப் பார்க்க வந்தார். அவர்



பெயர் அந்தோனி. அதே பங்கைச் சேர்ந்தவர்தான் அந்தோனி. பாதிரியார் ராசு அந்தோனியைப் பார்த்தவுடன் "வாங்க அந்தோனி வாங்க! உட்காருங்க! நல்லா இருக்கீங்களா? சாப்பிட்டீங்களா? வீட்ல எல்லாரும் நல்லா இருக்காங்களா? என்று பல கேள்விகளைக் கேட்டார். இந்தக் கேள்விகள் எல்லாம் அவருக்கு யாரைப்பார்த்தாலும், தானாக வந்துவிடும். அவரது மனம் 'இவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும்' என்ற எண்ணத்துடனேயே அத்தனை கேள்விகளைக் கேட்கத் தூண்டும். அதுபோலவே பலருக்கு உதவியும் செய்திருக்கிறார் ராசு.

அந்தோனியையும் அது போலத்தான் கேட்டார் ராசு. அந்தோனி ஏதோ ஒரு உதவிக்காகத்தான் நம்மிடம் வந்திருக்கிறார் என்று அறிந்து கொண்டு "சொல்லுங்க அந்தோனி என்ன வேணும்" என்றார். அந்தோனியோ "சாமி என் பொண்ணுக்கு கல்யாணம் செஞ்சு வைக்கணும் சாமி" "அதுக்கென்ன நடத்திடுவோம். மாப்பிள்ளை பையன் என்ன பண்றார்" என்று கேட்ட பாதிரியாரிடம் "சாமி, பையன் என் அக்கா மகன்தான், எல்லாரும் அது சரியாவராது, சிக்கலாகிடும்னு சொல்றாங்க சாமி, ஆனா எனக்கு அது சிக்கலாத் தெரியல, நீங்க நெனச்சா கல்யாணத்த நடத்திப்புடலாம்" என்றார் அந்தோனி.

"அப்படியா அது என்ன சிக்கல் சொல்லுங்க சரி பண்ணிடலாம்" என்றார் ராசு பாதிரியார். "என் மகளுக்கு வயசு பதினஞ்சு ஆகுது, அதத்தான் சாமி எல்லாரும் சிக்கல்னு சொல்றாங்க. நீங்க ஒத்துக்கிட்டா கல்யாணத்தை நல்லபடியா நடத்திடலாம்" என்றார் அந்தோனி.

ராசு பாதிரியாருக்கு சிரிப்பதா, வேதனைப்படுவதா என்று தெரியவில்லை. "அது எப்படி அந்தோனி? நம்ம திருச்சபைச்சட்டமும் இடந்தராது, அரசுச் சட்டமும் இடந்தராதே, பதினெட்டு வயசு முடிஞ்ச அடுத்த நாளே நீங்க கல்யாணத்த வச்சுக்கலாம், அதுக்கு முன்னாடி கல்யாணம் பண்ண முடியாது. வேணுன்னா நீங்க இப்ப ஒரு நிச்சயதார்த்தத்தை வச்சு முடிவு பண்ணிக்கோங்க, பதினெட்டு வயசுக்கப்புறம் திருமணத்தை நடத்திக்கலாம்" என்று பாதிரியார் சொன்னதுதான் தாமதம், அந்தோனி

## கவிதைப் போட்டி

உங்களது கவிதையை எங்களுக்கு அனுப்புங்கள். சிறந்த கவிதைக்கு பரிசு உண்டு. ஒருவர் பல கவிதைகள் அனுப்பலாம். ஆனால் தனித்தனியாகவே அனுப்ப வேண்டும். தகுதி பெற்றோர் நடுவர்களாக இருந்து கவிதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள். முதல் மூன்று நிலைகளில் தேர்ச்சியுறும் கவிதைகளுக்கு பணமுடிப்பு வழங்கப்படும். கவிதைகளைத் திருத்துவதற்கும் கவிதைத்தொகுதியில் வெளியிடுவதற்கும் 'முற்றம்' இதழுக்கு உரிமை உண்டு கவிதைகள் 12 வரிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும். நுழைவுக் கட்டணம் : ரூ.150. நிபந்தனைகளுக்கு உட்படுவோர் மட்டும் கவிதைகளை புகைப்படத்துடன் அனுப்பவும்.

முகவரி:

முற்றம்
நிர்வாக அலுவலகம்
எண். 13 / 5 புத்தா தெரு,
இரங்கராஜபுரம், சென்னை 600 024.
தொலைபேசி 8056281971.
E-mail: mutram2010@gmail.com

ஆவேச அந்தோனியாகிப் போய்விட்டார். அசிங்கமான வார்த்தைகளால் பாதிரியாரை அர்ச்சிக்கத் துவங்கிவிட்டார். சாமி என்று சொன்ன வாய் இப்போது சகட்டு மேனிக்குத் திட்டிக்கொண்டிருந்தது. பாதிரியாருக்கோ சினம் அதிகமாகிக் கொண்டே போனது, என்றாலும் கட்டுப்படுத்திக் கொண்டு எழுந்து நின்றார். பாதிரியாரை எதுவும் பேசவிடாமல் தொடர்ந்து திட்டித் தீர்த்துவிட்டு வெளியேறினார் அந்தோனி.

பாதிரியாருக்கோ மனவேதனை. இதை யாரிடமும் பகிர்ந்து கொள்ளவும் இயலாது. தனக்குள்ளே நொந்து போனார்



பாதிரியார். நாம் ஏன் பாதிரியாராக ஆனோம் என்று முதன் முதலாக தன்னைத் தானே கேட்டுக்கொண்டார். இந்தப் பணியை விட்டுவிடலாமா? என்று சிந்திக்கவும் தலைப்பட்டுவிட்டார். அன்று முழுவதும் அவர் வெளியே செல்லவில்லை. ஒன்றிலும் அவர் மனம் செல்லவில்லை. இரவுத் தூக்கமும் இல்லாமல் போய்விட்டது.

மறுநாளும் எங்கும் செல்லவில்லை. மதியம் உணவு உண்டுவிட்டு விவிலயத்தைத் திறந்து வாசிக்க ஆரம்பித்தார் ராசு பாதிரியார். நேற்று திட்டிவிட்டுச் சென்ற அந்தோனி அவருக்கு முன்னால் வந்து நிற்க, "பாதிரியார் "எதற்கு வந்திருக்கிறீர்கள்? இன்னும் ஏதாவது வசவுகள் பாக்கி இருக்கிறதா?" என்றார். "சாமி நீங்க எங்களுக்கெல்லாம் அப்பன் தானே, நாங்க செய்ற தப்ப நீங்க பெருசா எடுத்துக்கலாமா? ஏதோ ஒரு வேகத்துல அப்படிப் பேசிப்புட்டேன் பொறுத்துக்கோங்க சாமி" என்றார் அந்தோனி.



ராசு பாதிரியாருக்கு என்ன சொல்தென்றே தெரியவில்லை. "சரி சரி என்ன விசயமா வந்தீங்க" என்றார். "அதே தான் சாமி எப்படியாவது எம்புள்ளை கல்யாணத்தை நடத்திக்கொடுங்க சாமி" என்றார் அந்தோனி.

அந்தோனியை அருகில் அமரவைத்து அவர் புரிந்து கொள்ளும் விதமாக எல்லாவற்றையும் விளக்கிச் சொன்னார் பாதிரியார். இரண்டு மணிநேரத்துக்கு மேல் அவரிடம் பேசிய பின்னர்தான் அந்தோனி தலையாட்டினார். இறுதியாக "சரி சாமி, நீங்க சொன்னா எல்லாம் சரியாத்தான் இருக்கும்" என்று கூறிவிட்டு நடந்து சென்றார் அந்தோனி.

ராசுப் பாதிரியாருக்கு, அந்தோனி திட்டியதெல்லாம் மறந்துவிட்டது. நீங்க எங்க அப்பன்தானே என்ற அந்தோனியின் குரல் மட்டும் அவரது செவியில் இனிய இசையாய் ரீங்காரமிட்டுக் கொண்டே இருந்தது.

இருங்கோவேள்.

# இலக்கணங்களின் வழி நீற்கும் ஒப்பற்ற தமிழ்மொழி.

இயற்றமிழன்.

ஒற்றுமை

த ட - இரண்டும் வாய்வழியே நேரே மூச்சு வெளிப்படப் பிறப்பவை (oral)

ந ண - இரண்டும் மூக்கு வழியே மூச்சு வெளிப்படப் பிறப்பவை (nasal)

ல ள - இரண்டும் மூச்சை நாவால் பிரித்து வெளிப்படுத்தப் பிறப்பவை (lateral, liqyuid)

ர ழ - இரண்டும் ர்ர்ர், ழ்ழ்ழ் என்பனபோல் நாவின் பல சிறு அசைவுகளால் பிறப்பவை

வேற்றுமை

தகரத்தை ஒலிப்பதைவிட டகரத்தை ஒலிப்பதில் நா உயர்ந்தும் பின்னோக்கியும் செல்கிறது.

நகரத்தை ஒலிப்பதை விட ணகரத்தை ஒலிப்பதில் நா உயர்ந்தும் பின்னோக்கியும் செல்கிறது.

லகரத்தை ஒலிப்பதைவிட ளகரத்தை ஒலிப்பதில் நா உயர்ந்தும் பின்னோக்கியும் செல்கிறது.

ரகரத்தை ஒலிப்பதைவிட ழகரத்தை ஒலிப்பதில் நா உயர்ந்தும் பின்னோக்கியும் செல்கிறது.

ஆகவே, த ந ல ர - தாழ் நாநுனி ஒலிகள் (lower apical consonants)

ட ண ள ழ - உயர் நாநுனி ஒலிகள் higher apical consonsonants

இவ்வளவு விளக்கமும் பாகுபாடும் கிடைத்த பிறகே, ர கரத்திற்கும் ழ கரத்திற்கும் உள்

# வேண்டுகோள்!

*நடுவண் அரசு மற்றும் மாநில அரசுகளே!*
*கல்வியையும், மருத்துவத்தையும் இலவசமாக்குக!*
*விவசாயத்திற்கு இலவசங்களையும், மானியங்களையும்*
*அதிகமாக்குக! மற்ற இலவசங்கள் அனைத்தையும்*
*தவிர்த்திடுக!*

*- முற்றம்*

இதழில் வரும் தனியார் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கும், தரத்திற்கும் 'முற்றம்' நிர்வாகம் பொறுப்பல்ல.

*கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் கற்பனையே!*

உறவு புலனாகிறது.

மிகப் பழங்காலத்திலேயே தொல்காப்பியனார் ஒலி பிறக்கும் முறையை நுணுக்கமாக ஆராய்ந்து ரகரம் ழகரம் இரண்டுக்கும் பொதுத்தன்மை இருத்தலை உணர்ந்து,

நுனிநா அணரி அண்ணம் வருட



ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்

என்று ஓதியிருக்கும் திறன், இதனால் வியத்தற்குரியதாக விளங்குகிறது.

பழங்காலத்தில் தமிழரோடு வாணிபம் செய்து பழகிய கிரேக்கர் இந்த உண்மையை உணர்ந்து, சோழர் என்பதைச் 'சோர' என்றும், தமிழகம் என்பதைத் 'தமிரிகெ' என்றும் தம் மொழியில் எழுதியதும் ஈண்டுக் கருதத்தக்கது.

பொழுது ப்ரொத்து (தெலுங்கு)
கூழ் கூறு (துளு)
புழு புரி (துளு) புருகு (தெலுங்கு)
எழுந்து ஏர்பு (இலக்கியத் தமிழ்)
முதலிய சொற்களின் திரிபுகளும் இதற்குச் சான்றாக உள்ளன.

முழுகு முணுகு (தெலுங்கு)
குழு குணி (கன்னடம்)
முதலிய சில சொற்களில், மடிநா ஒலியாகிய ழகரம் மற்றொரு மடிநா ஒலியாகிய ணகரமாகத் திரிதலும் தமிழில் சில மாவட்டத்தாரின் பேச்சு மொழியில்,

வழக்கம் வளக்கம்
கிழக்கு கெளக்கு
தொழில் தொளில்
என மற்றொரு மடிநா ஒலியாகிய ளகரமாகத் திரிதலும்,

கோழி கோடி (தெலுங்கு)
ஏழு ஏடு (தெலுங்கு)
கூழு கூடு (தெலுங்கு)
என்பவற்றில் இன்னொரு மடிநா ஒலியாகிய டகரமாகத் திரிதலும் காணின், ழகரம் ஒரு மடிநா ஒலி என்று கொள்வதன் பொருத்தம் தெளிவாகின்றது.

மெய்யெழுத்துக்களின் பிறப்பு முயற்சியை நோக்கியும் ஒலிநூலார் அவற்றைப் பாகுபாடு செய்வர். அம்முறை வருமாறு:

1. வெடியினம் க, ச, ட, த, ப, (Plosives or stops)
(மூச்சுத் தடைபட்டு வெடிபோல் வெளியாதல்)

2. மூக்கினம் ங, ஞ, ண, ந, ம, ன (Nasals)
(மூக்கின் வழியாக வெளியாதல்)

3. பிரிவளியினம் ல, ள (Laterals or Liquids)
(மூச்சு வெளிப்படுங்கால் வாயிடையே நாக்குத் தடுத்து நின்று அம்மூச்சைப் பிரித்து வெளிப்படுத்தல்)

4. உரப்பினம் ர, ழ, ற, (trilled or rolled consonants)
ட், ர் என்பதுபோல் நாவின் சில சிறு

அசைவுகளுடன் மூச்சு வெளியாதல்)

5. உயிர்ப்பினம் தமிழில் இல்லை (fricatives)
உஸ் போலாகும்: ஸ இவ்வகையைச் சாரும். பசலை, பசி, கசப்பு முதலியவற்றில் சகரம் சில இடங்களில் இவ்வாறு ஒலிக்கப்படுகிறது.

6. அரையுயிர் ய, வ (semivowels)
உயிருமாகாது மெய்யுமாகாது இடையினமமாக வருவன)

க ச ட த ப ற என்பனவற்றைத் தொல்காப்பியனார் வல்லினம் என வகுத்தது பொருந்தியதாகும். ஆயின் ங ஞ ண ந ம ன என்பனவற்றை மெல்லினம் என்பதைவிட மூக்கினம் என வழங்குதல் ஒலிநூலுக்கு இயைவதாகும். மெல்லினம் என்ற பெயரின் காரணத்தை விளக்கிய நச்சினார்க்கினியர், "மெல்லென்றிசைததலானும் மெல்லென்று மூக்கின் வளியாற் பிறத்தலானும் மெல்லெழுத்தாயிற்று" என்று எழுதியுள்ளார். அக்கடல் என்னுமிடத்தில் ககரம் வல்லொலியே: அதன் மெல்லொலி, அங்கவை என்பதன் ககரத்தில் உள்ளது: அதன் மூக்கொலி, ஙகரத்தில் உள்ளது ஆதலின், ககரம் முதலியவற்றை வெடியினம் எனக்கொள்ளும் ஒலி நூல், அவற்றையே இரண்டிரண்டாகப் பிரித்து வல்லொலியும் மெல்லொலியும் (surds and sonants) ஆகக்கொள்ளும் ங ஞ ண ந ம ன என்பற்றை மூக்கினம் எனக் கொள்ளும்.

ய ர ல வ ழ ள என்னும் ஆறனையும் இடையெழுத்தெனக் கொண்டார் தொல்காப்பியனார் அவை உயிர்க்கும் மெய்க்கும் இடைபபட்ட இனமாகத் தோன்றுமாதலால் இடையெழுத்தெனப் பட்டனவாகக் கொள்ளல் வேண்டும்: வல்லினத்திற்கும் மெல்லினத்திற்கும் இடைப்பட்ட ஒலிகளெனக் கருதுதல் பொருந்தாமை காணலாம்.

தொடரும்...

# அரவான்.



அரவான் என்ற திரைப்படத்தின் மூலமாக, இசை அமைப்பாளராக அறிமுகமாகிறார் சிறந்த பின்னணிப் பாடகரான கார்த்திக் அவர்கள். "அரவான் படம் ஒரு சிறந்த படம். இப்படத்திற்கு இசை அமைக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது பெரும் வரம் என்றே கருதுகிறேன். அரவான் படம் காலங்களைக் கடந்து மக்களால் பேசப்படும் படமாக இருக்கும் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை. இப்படத்தின் இசைஅமைப்பாளர் நான் என்று நினைக்கும்போது எனது மனம் மகிழ்ச்சியடைகிறது" என்று கூறினார், பல பாடல்களை தனது குரலால் வெற்றிப்பாடல்களாக மாற்றுகிற, பின்னணிப்பாடகர் திரு. கார்த்திக் அவர்கள்.

மெய்யறிவாளன்.

# நாம்
# தமிழ் மக்கள் பேரவை
## செய்தி வெளியீடு

நாம் தமிழ் மக்கள் பேரவை அமைப்பும், 'நிலம் நீர்' சங்கமும் இணைந்து வெளியிடும் செய்திக் குறிப்பு:



1. கேரள மாநில மக்கள் கல்வியில் சிறந்தவர்கள் - முற்போக்குச் சிந்தனை கொண்டவர்கள். ஆனால் முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பு பற்றி கேரள அரசியல் கட்சிகள் மக்களிடையே எழுப்பியுள்ள பீதி ஆதாரங்களற்றதும், அறிவியற்பூர்வமான ஆய்வுகளுக்கு முரணானதும், உள்நோக்கம் கொண்டதுமாகும்.

2. முல்லைப்பெரியாறு அணையின் உறுதி நிலையை பல்வேறு நடுநிலையான உயர்நிலை நிபுணர்களது ஆய்வுகள் அடிப்படையில் 2006 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் உறுதி செய்து நீர்மட்டத்தை 142 அடிக்கு உயர்த்தலாம் என அனுமதித்தது. இந்தத் தீர்ப்பு இன்றுவரைக்கும் வேறெந்த உயர் அதிகாரத்தாலும் ரத்து செய்யப்படவில்லை.

3. கேரள அரசு கூறுவது போல அணை உடையுமானால் வெள்ள நீர் முல்லைப் பெரியாறு பள்ளத்தாக்கு வழியாக வழிந்தோடி இடுக்கி அணையை அடையும். இடுக்கி அணை., முல்லைப் பெரியாறு அணையைப் போல் 7 மடங்கு பெரியது. முல்லைப்பெரியாறு அணையின் நீர் வெளியேற்றுத் திறன் வினாடிக்கு ஒரு லட்சத்து 22 ஆயிரம் கன அடி. இடுக்கி அணையின் நீர் வெளியேற்றுத்திறன் வினாடிக்கு 4 லட்சம் கன அடி. கேரள முதல்வர் சொல்லும் 20 லட்சம் மக்களும் மேட்டுப்பகுதியில் உள்ளவர்கள். கடல் மட்டத்திலிருந்து பெரியாறு அணை மட்டம் 2889 அடி உயரத்தில் உள்ளது. குமுளி, அணையின் பின்புறம் கடல் மட்டத்திலிருந்து 3100 அடி உயரத்திலும், வண்டிப் பெரியாறு 3350 அடி உயரத்திலும், பாம்பனார் 3750 அடி உயரத்திலும், ஏலப்பாறை 4850 அடி உயரத்திலும் அமைந்துள்ளன. வெள்ளநீர் பள்ளத்திலிருந்து மேட்டுக்குப் பாயும், என நீரியல் விதியினையே மாற்றிக் கூறுகின்றனர்.

5. அணையின் மேல் மட்டமாகிய 155 அடி வரை நீரைத் தேக்கினால் நீர் பரவும் பகுதியான 8591 ஏக்கரை 999 ஆண்டுகளுக்கு குத்தகை ஒப்பந்தம்

போடப்பட்டு, அதன்படி ஆண்டுக்கு ரூபாய் 2.58 லட்சம் கேரள அரசுக்கு தமிழக அரசு வழங்கி வருகிறது. ஆனால் கடந்த 30 ஆண்டுகளாக கேரள அரசின் நிர்ப்பந்தத்தால் அணையின் நீர்மட்டம் 136 அடியாகக் குறைக்கப்பட்டதால் 136 அடி மட்டத்தில் நீர்ப்பிடிப்பு 4677 ஏக்கர் மட்டுமே. எனவே இடைப்பட்ட நிலப்பரப்பு 3914 ஏக்கர் கேரள அரசியல்வாதிகளால், சமூக விரோதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு இதில் ஏராளமான மாளிகைகள், விடுதிகள் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இத்தகைய ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு கேரள அரசு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. நீர்மட்டத்தை உச்சநீதிமன்ற ஆணையின்படி இப்போது 142 அடியாக உயர்த்தினால் இக்கட்டுமானங்கள் நீரில் மூழ்கும். எனவே இக்கட்டிட உரிமையாளர்கள் இதனை அரசியலாக்குகின்றனர். ஆக்கிரமிப்புப் பகுதியில் உள்ள கட்டிடங்களின் விவரங்கள் மற்றும் உரிமையாளர்களின் பெயர்ப்பட்டியல் எடுக்கப்பட்டால் இந்த அரசியல்வாதிகளின் பின்புலத்தில் யார் உள்ளார்கள் என்பது தெளிவாகிவிடும்.

முல்லைப் பெரியாறு பிரச்னையில் தமிழக அரசின் உறுதியான நிலைப்பாட்டினை பாராட்டுகிறோம். தமிழக அரசியற்கட்சிகள் இவ்விஷயத்தில் ஒரே குரலாய் ஒலித்திடவும் வேண்டுகிறோம்.

இவண்.

1. ஆர். காந்தி. தலைவர், நிலம் - நீர் சங்கம்.

2. அ. வீரப்பன். முன்னாள் தலைமைப் பொறியாளர்.

3. ம. சுப்ரமணியன். முதன்மை ஆலோசகர், நாம்-தமிழ் மக்கள் பேரவை.

4. ம. ஜெகத் கஸ்பார். நிறுவனர், நாம்-தமிழ் மக்கள் பேரவை.

5. சதாசிவம். தலைவர். நாம்-தமிழ்

# வெயிலே! வெயிலே!

வெயிலே வெயிலே கொஞ்சம் ஒதுங்கு
பால் மேனியாள், பனிக்கோர்வையாள்
தென்றல் போலொரு தேவதை வருகிறாள்
சந்தன மேனியை சருகாய் மாற்றாதே
மெல்லிய தேகத்தை வியர்க்க வைக்காதே

அழகிய கொடியிடை கசகசத்தது
ரோஜா வதனம் வாடிடக்கண்டதும்
என்மனம்
துடிக்கிறது.



தாமரைப்
பாதம்
தனலில்
தவிக்கிறது
வெப்பக்
கைகளை

முடக்கிப்போட்டுவிடு
உதிரும் வேர்வையில் உயிர்த்துளி
சோர்கிறது.

சாயா தேவி என நினைத்து
பார்த்து ரசிக்க நீயும் வந்தாயோ
அவள் இவள் இல்லை, இவள் அவள்
இல்லை
பாவம் சற்று விலகிவிடு

ஆதியும் அந்தமும் ஆனவனே
சூரிய தேவனே போற்றி
சுடர்மிகும் ஒளியே போற்றி
கும்பிடு போடுகிறேன்

ஆகா வெயிலே, வெயிலே
என் வேண்டுதல் கேட்டாயே
மேக மகளை தோழியாக
அனுப்பிவைத்தாயே
மோடப்பொழுது சூழ்ந்ததும்
என் தேவதை முகமது மலரக் கண்டேன்.

நிலவை. ஆர். கலையரசி.

# சென்னை மாநகரச் சாலைகள்.

சென்னை மாநகரில் சிறுமழை



பெய்தாலும் பெருமளவில் தண்ணீர் தேங்கி சாலைகள் சீரழிகின்றன. இதற்கு அரசு என்ன செய்ய வேண்டும் என்பதை எந்த அரசும் சீர்தூக்கிப் பார்ப்பதில்லை.

இப்பிரச்சினை நிரந்தரமாக தீர்க்ககூடிய ஒன்றே என்கின்றர் "நாம் தமிழ் மக்கள் பேரவை" பொறியாளர்கள். முதலில் மாநகரத்தின் மேடான பகுதிகள், தாழ்வான பகுதிகள் எவை என்பதைத் தெரிந்து கொள்ள விரிவான சென்னை மாநகரத்தின் வரைபடத்தைத் தயாரித்து, ஒட்டு மொத்த நகரத்துக்குமான வடிகாலை உருவாக்கியாக வேண்டும். அப்போதுதான் நகரத்தில் தண்ணீர் தேங்காது என்று பொறியாளர்கள் தங்களது கருத்தைக் கூறுகிறார்கள்.

நகரச் சாலைகளை செப்பனிடுகிற வேலைகள், கிழிந்த ஆடைக்கு ஒட்டுப் போட்டுத் தைப்பதைப் போல ஆங்காங்கு தரமின்றி ஒட்டுப்போடப்பட்டு பாழ்படுத்தப்படுகிறது. அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற ஆளுங்கட்சிப் புள்ளிகள் சம்பாதிப்பதற்காக, (பொதுச் சேவைக்கு வந்தவர்கள்) துண்டு துண்டாக காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டு, அவர்கள் தரமில்லாத சாலைகளை அமைத்து, சில நாட்களுக்குள் பல்லிளிக்க வைத்து விடுகின்றனர். பல இடங்களில், பாறாங்கல்லை வைத்துப் பல்லாங்குழி ஆடுகிற அளவுக்கு சாலைகள் பழுதுபட்டு விடுகின்றன.

மாநகரச் சாலைகள் அனைத்திற்கும் ஒட்டு மொத்தமாக காண்ட்ராக்ட் கொடுத்து, சாலைகளைச் செப்பனிடவேண்டும். அது தவிர்த்து, ஒவ்வொரு சாலைக்கும் அரசு செலவிடுகிற தொகை எவ்வளவு என்பதை மக்கள் அறிந்து கொள்ளும்படி, விளம்பரப் பலகை வைத்திட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

அரசு இந்தக் கருத்துக்களையும் கவனத்தில் கொண்டு, நகரத்தை சீர்படுத்த வேண்டும் என்பதே பொதுமக்களின் வேண்டுகோளாகும்.

செல்வராஜ்.


**இசைப் பயிற்சி**

வீணை, வயலின், பேஸ்கிடார், ரிதம் கிடார், லீட் கிடார், ட்ரம்ஸ், கீபோர்ட், வாய்ப்பாட்டு கற்றுத்தர, பயிற்சி கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆர்வமுடையவர்கள்

அணுக வேண்டிய அலைபேசி எண்: 9790764721.

## சங்க கால தமிழ்ப்புலவர்களின் பெயர்கள்.

சேகம் பூதனார்.
சேந்தங் கண்ணனார்.
சேந்தம் பூதன்.
சேந்தன் பூதனார்.
மதுரை எழுத்தாளன்.
சேந்தன் கீரன்.
சேரமான் இளங்குட்டுவன்.
சேரமான் எந்தை.
சேரமான் கணைக்கால் இரும்பொறை.
சேரமான் கேட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை.
சோணாட்டு முகையலூர்ச் சிறு கருந்தும்பியார்.
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்.
சோழன் நல்லுருத்திரன்.
சோழன் நலங்கிள்ளி.
தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார்.
தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார்.
தங்கால் பொற்கொல்லனார்.
தங்கால் முடக்கொற்றனார்.
தங்கால் முடக்கொல்லனார்.
தனி மகனார்.
தாமப்பல் கண்ணனார்.
தாமோதரன்.
தாயங்கண்ணனார்.
தாயங்கண்ணன்.
எருக்காட்டூர் தாயங் கண்ணனார்.
தாயங் கண்ணியார்.
திப்புத் தோளார்.
திருத்தாமனார்.
தீன்மதி நாகன்.
தும்பிசேர் கீரனார்.
தும்பி சொகினனார்.
துறைக்குறுமாவிற் பாலங்கொற்றனார்.
துறையூர் ஓடைகிழார்.
தூங்கரோரியார்.
தூங்கலோரி.
தேய்புரிப் பழங்கயிற்றினார்.
தேரதரன்.
தேவ குலத்தார்.
தேவனார்.
தொடத்தலை விழுத்தண்டினார்.
தொண்டியாமூர்ச் சாத்தனார்.
தொண்டைமான் இளந்திரையன்.
இளந்திரையனார்.
தொல் கபிலர்.
தொல் கபிலன்.
நக்கண்ணையார்.
பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார்.
நக்கீரர்.
நக்கீரனார்.
மதுரைக்கணக்காயன் மகன் நக்கீரன்.

மேழிச்செல்வி.




## அவமானம்!

மக்களைக் கொன்று
அரசுக்கு
வருமானமா?
மானத்தை
விட்டு
மதுவில்
மக்களா?
ஏன் இந்த
அவமானம்
தமிழ்நாட்டிற்கு?

மணவை புவன்.

நயன்தாராவின் கடைசிப்படம் ஸ்ரீராமராஜ்யம். பந்தயக்கோழி, பொம்மாயி சத்யம் போன்ற படங்களைத் தயாரித்த புயூச்சர் பிலிம்ஸ் பட நிறுவனம் சார்பாக கிரண் தயாரிக்கும் படம் ராம்ராஜ்யம். சுமார் 45 கோடி ரூபாய் செலவில் தயாராகியுள்ள இப்படத்தில் ராமர் வேடத்தில் பாலகிருஷ்ணாவும், சீதா வேடத்தில் நயன்தாராவும் நடித்திருக்கிறார்கள், வால்மீகி வேடத்தில் நாகேஸ்வரராவ் நடிக்கிறார். இசை இளையராஜா. இயக்கம் பாபு.



இந்தியர்களின் மனதில் என்றுமே பெருமை கொள்ளும் விதமாக ராமாயணம் இருக்கிறது. ராமாயணக் கதைகள் சுவையானது மட்டுமல்ல பக்தி கலந்தது என்பதால் மரியாதையும் உண்டு. அதில் லவ குசா பற்றிய பகுதிகள் ரொம்பவும் பரபரப்பான சம்பவங்களை உள்ளடக்கியது. அதை மையப்படுத்தி உருவாக்கப்பட்டதே ஸ்ரீராமராஜ்யம் படம். நிச்சயம் அனைத்து தரப்பினரையும் கவரும்.

இந்தப்படத்திற்கு பின்னணி இசைக்காக நார்வே நாட்டிலிருந்து சிறந்த இசைக் கலைஞர்கள் மும்பைக்கு வரவழைக்கப்பட்டனர். பின்னணி இசைக்காக மட்டும் ஒரு கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. நயன்தாரா இனி சினிமாவில் நடிப்பதில்லை - இதுதான் என் கடைசிப்படம் என்று அறிவித்த கடைசிப் படம் ஸ்ரீராமராஜ்யம்.

# கோவலனின் காதலி.

கல்வி இருக்கிற இடத்தில செல்வம் இருக்காது, செல்வம் இருக்கிற இடத்தில் கல்வி இருக்காது என்பார்கள். அதற்கு உதாரணமே தனலட்சுமிதான். ஏழைப்பெண், நன்றாகப் படிக்கக்கூடியவள். அவளுக்கு கல்லூரியில் படிக்க சீட் கிடைக்கிறது. காலேஜ் பீஸ் கட்ட பணம் இல்லை. பேங்க் லோனுக்கும் வழியில்லை. உதவுவதற்கும் உறவினர்கள் யாரும் முன்வரவில்லை. தான் படித்து தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய ஆசையும் அவளுக்கு உண்டு. அவளை கல்லூரியில் படிக்கும் பாண்டியன் காதலிக்கிறான்.

மிகப் பெரிய கோடீஸ்வரன் பார்த்தசாரதி, தனலட்சுமிக்கு ஆதரவளித்து படிக்க வைக்க முன்வருகிறான். அதற்குப் பிரதிபலனாக அவளையே கேட்கிறான். பார்த்தசாரதிக்கோ திருமணமாகி, குழந்தையும் இருக்கிறது. கல்விக்காக காதலை இழப்பதா, இல்லை காதலுக்காக கல்வியை இழப்பதா? என்று குழம்புகிறாள்?

தனலட்சுமி என்ன முடிவு எடுத்தாள்? காதலா? கல்வியா? காலம் அவளை எந்த மாதிரியான முடிவெடுக்க வைத்தது? அதற்கான விடைதான் குட் டே பிலிம்ஸ் சார்பில் இரா. தமிழ்ச்செல்வன் தயாரிப்பில் கே. அர்ஜூன்ராஜா கதை, திரைக்கதை, வசனம் எழுதி டைரக்ட் செய்யும் கோவலனின் காதலி படத்தில் விடை தெரியும். படப்பிடிப்பு கண்ணகி வாழ்ந்த பூம்புகாரிலும், மாதவி வாழ்ந்த தரங்கம்பாடியிலும், அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் நடைபெற்று வருகிறது.

# கொங்காணி.

“போன பயலக் காணோம் பாத்தியா, நான் அவசரமா போகணும், நான் போயிட்டு வந்தப்புறம் போடான்னு சொன்னேனே கேட்டானா அந்தப்பய, நீயும் சேந்து அவன அனுப்பி வைச்சே, இன்னும் வரல பாரு” என்று தனது மனைவி செம்மேனியிடம் குறைபட்டுக் கொண்டிருந்தார் வில்லாளன்.

என்னங்க பண்றது அவன் போன வேலையும் முக்கியந்தானே, கொஞ்சம் பொறுங்க வந்துருவான். இவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது இடையில் அம்மாவிடம் கமுக்கமாய் பேசினான் இளையமகன் மானமாறன். “அம்மா நான் போகணும்னு சொன்னேன்லம்மா” பொறுடா என்று கிசுகிசுத்தாள் மகனிடம். என்ன சொல்றான் இளையவன் என்று கடுகடுத்தார் வில்லாலன். அது ஒன்னுமில்லங்க என்று சமாளித்தாள் செம்மேனி.

பத்தடிக்குப் பத்தடி வீட்டிற்குள் பல பத்துத் தடவை நடந்து முடித்துவிட்டார் வில்லாளன் மூத்தமகன் இன்னும் வந்தபாடில்லை. அவரது அவசரம் அவருக்குத்தானே தெரியும்.

மனைவி செம்மேனிக்கோ ‘மூத்தமகன் வந்துவிட்டால் இவர் போகவேண்டும் என்று அடம் பிடிப்பார். இளையமகனது வேலையும் முக்கியமானது, இவர் வெளியில் சென்றால் பலரிடம் பேசிவிட்டு நேரம் கழித்துதான் வருவார். அவர் அப்படி வந்தால் இளையமகனது வேலை கெட்டுப் போகும், இதை எப்படி சமாளிப்பது என்று தீவிரமாக யோசித்தாள் அவ்வீட்டின் தலைவி செம்மேனி.

ஏங்க திங்க ஏதாவது வேணுமா? ஒர செரங்கை அரிசி கெடக்கு வறுத்துத் தரட்டுமா? மழைக்கு நல்லா இருக்கும் என்றாள் செம்மேனி. “சரி சரி ஏதாவது வறுத்துக் கொடு அதையாவது திங்கலாம், இந்தப் பய இப்படிப்பண்ணிப்புட்டானே” என்று மறுபடியும் நடந்து கொண்டிருந்தார் வில்லாளன்.

செம்மேனி அவசர அவசரமாக கொடி அடுப்பில் கிடந்த பருப்பை இறக்கி வைத்துவிட்டு, முதல் அடுப்பில் இருந்த உலைநீரை கொடி அடுப்புக்கு மாற்றிவிட்டு, பெரிய அடுப்பில் பொரிக்கஞ்சட்டியை வைத்து அரிசியை வறுக்க ஆரம்பித்தாள். பானையில் இரண்டு செரங்கை அரிசிதான் கிடந்தது, அதையும் எடுத்து வறுத்து கணவரிடமும், மகனிடமும் கொடுத்துவிட்டு மூத்த மகனுக்கு வேண்டுமென்று சட்டியிலேயே சிறிதளவை வைத்தாள்.

பொரி அரிசியை இரண்டுவாய் தின்றவுடன் வில்லாளன் கொஞ்சம் அமைதியாக காணப்பட்டார். அவர் அருகில் வந்து அமர்ந்த செம்மேனி “ஏங்க நம்ம மானமாறந்தான் அவன் பள்ளிக்கூடத்திலேயே நெறய மதிப்பெண் வாங்கியிருக்கானாம்ங்க, அவனோட படிக்கிற கீழத்தெரு முத்துவோட அம்மா எங்கிட்ட சொன்னா. தம்பிய நல்லா படிக்க வைங்க, பெரிய படிப்பெல்லாம் உங்க மகன் படிப்பான்னு வேற சொன்னாங்க” என்றாள்.

வில்லாளனோ ம் ம் நானும் கேள்விப்பட்டேன். படிக்கட்டும் படிக்கட்டும், பெரியவனத்தான் சரியா படிக்க வைக்காம விட்டுப்புட்டோம், சின்னவனாவது நல்லா படிக்கட்டும். எப்பாடு பட்டாவது இவனை படிக்க வச்சுப்புடணும் என்றார். செம்மேனிக்கு கொஞ்சம் துணிச்சல் வந்தது. அந்த முத்துக்கிட்ட ஒரு புத்தகம் இருக்காம், அத வாங்கிப் படிக்கணுமாம், மானமாறங்கிட்ட அந்தப் புத்தகம்இல்ல, ம்ம் நம்ம வாங்கிக் குடுத்தாதானே இருக்கும். அதான் போய் வாங்கிட்டு வந்து படிக்கிறேம்மான்னு இளையவன் சொல்றான். பெரியவன் வந்ததும் சின்னவன அனுப்பலாமா, போயிட்டு சுருக்கா வந்துருவாங்க, அதுக்கப்புறம் நீங்க கடை கண்ணிக்குப் போயிட்டு வாங்க, என்னங்க சொல்றீங்க என்றாள் செம்மேனி. சரி சரி போயிட்டு வரட்டும் என்று மகனின் படிப்பை கவனத்தில் கொண்டு கூறினார்.

சிறிது நேரத்தில் மூத்தமகன் வந்து சேர்ந்துவிட்டான். அவன் வாங்கி வந்த அரிசியை வெகுநேரமாக கொதித்துக் கொண்டிருந்த உலைப்பானையில் களைந்து இட்டாள் செம்மேனி. சின்னவன் புத்தகம் வாங்கப் புறப்பட்டான். வில்லாளன் தனது ஏழ்மையை நினைத்து தனக்குத்தானே சினந்துகொண்டார். நாமும் தான் ஓயாமல் உழைக்கிறோம், நமக்கு ஒரு நல்ல காலம் வரமாட்டேன் என்கிறதே என்று சொல்லிக்கொண்டார்,.

மானமாறன் விரைவாகவே திரும்பிவிட்டான். என்னங்க தம்பி வந்துட்டான் நீங்க போய்ட்டு வாங்க என்றாள் மனைவி. "இல்லம்மா நான் போகல, நான் போய் என்ன பண்ணப்போறேன். போனா டீக்கடைக்காரருக்கு கடன் ஏறும், நாலு பேருக்கிட்ட நாலு வார்த்தை பேச வேண்டியிருக்கும், தேவையில்லாம யாராவது எதிரியாவாங்க, நேரம் போறதும் தெரியாம நேரஞ்சென்டு வந்து உங்க தூக்கத்தையும் கெடுக்க வேண்டிவரும். நான் போகல" என்றார். செம்மேனி மகழ்ந்து போனாள். வீட்டில் உள்ள ஏழ்மை கூட சில நேரங்களில் நன்மை செய்கிறது என்று அவள் மனம் பேசியது.

ஒருவர் வெளியே போனால், மற்றவர் வெளியே போக முடியாதபடி அவர்களை அந்தப் பாடு படுத்தியது ஒரே ஒரு சாக்குதான். மழை பெய்து கொண்டிருந்ததால், தங்களிடம் இருந்த ஒரு சாக்கை கொங்காணியாக மாற்றி தலையில் மாட்டிக்கொண்டு, ஒவ்வொருவராகத்தான் செல்ல முடிந்தது. ஒரு குடை வாங்கலாம் என்றால்கூட, அவர்களது பொருளாதாரம் அவர்களுக்கு இடம் கொடுக்கவில்லை. இதுவரை மழைவந்தால் கொங்காணிதான். வெயிலுக்கு குடையோ வேறு எதுவுமோ தேடும் குடும்பம் இல்லை அவர்களது குடும்பம். இருக்கிற ஒரே கொங்காணியை பத்திரமாக வைத்துக்கொண்டனர் அடுத்த மழைக்கும் அதுதான் உதவும் என்பதால்.

ஆசிரியர்.

## கொங்காணி

கொங்காணி என்பது, சாக்கை(கோணி) இணைக்கப்பட்ட கீழ் முனைகள் இரண்டையும் சேர்த்து, தலையில் முக்காடுபோல் போட்டுக் கொள்வதாகும். பெருமழைக்கு இது பயன்தராது. சிறுமழைகளைத் தாங்கும். குடை இல்லாவர்களுக்கு இதுதான் குடை.

# கொடி அடுப்பு

விறகு அடுப்பு பயன்படுத்தபவர்களுக்கு கொடிஅடுப்பும் சேர்த்தே செய்து தந்தார்கள் குயவர்கள். அவசரமாக ஆக வேண்டிய சமையல் பெரிய அடுப்பிலும், சிறிது நெருப்பு தேவைப்படும் அல்லது சுடு கொடுத்தால் போதும் என்ற அளவில் இருக்கும் சமையலுக்கு கொடி அடுப்பும் பயன்படுத்தப்பட்டு வந்தது. பெரிய அடுப்பில் எரியும் விறகின் வெப்பம் கொடி அடுப்புக்கும் செல்லும்.

## இலங்கையில் தமிழர்.

முன்னர் இலங்கை என அறியப்பட்டிருந்த இன்றைய சிறீலங்கா, வரலாற்று ரீதியாக இரண்டு வேறுபட்ட தேசங்களாவே இருந்தது. ஆயினும் இத்தீவின் வரலாறு ஒரே தேசம் என எழுதப்பட்டும், குறிப்பிடப்பட்டும் வருகின்றது. இங்கு சிங்களவர், தமிழர் என்ற இரு தேசிய இனங்கள் வரலாற்றுக் காலத்திலிலிருந்தே தொடர்ச்சியாக வாழ்கின்றன. இவை இரண்டுக்குமே தெளிவான, வேறுபட்ட சுய மத, மொழி, கலாசார, சமூக, பொருளாதார, அரசியல் விழுமியங்கள் உண்டு. பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னர்,

மத்தி காலத்துக்கும் முன்னதாகவே, இவர்கள் தத்தமது வேறுபட்ட இராச்சியங்களைத் தமது பாரம்பரிய தாய் நிலங்களில் திட்டமாக நிறுவியுள்ளனர். இருந்தபோதிலும், தமிழருக்கு அவர்களது சுயநிர்ணய உரிமைக்கான நியாயபூர்வமான உரிமைகள் எதுவுமே இல்லையென்ற வாதம் சிங்கள மக்கள் மத்தியில் பலமாகவே ஒலிக்கின்றது.

வரலாற்று ரீதியான பரம்பரைக் கதைகளையிட்டுப் பேசுவது இங்கு நோக்கமில்லை. இலங்கையின் பெரும்பான்மை இனமான சிங்களவருக்கு உள்ள அதே உரிமைகள் இலங்கைத் தமிழருக்கும் உண்டு. அவர்கள் தமது தேசத்தில் ஒரு தனித்தேசியமாக வாழவும், அதை ஆளவும் உரிமையுள்ளவர்கள், இதை வரலாறு, தொல்லியல், மானுடவியல், சமூகவியல், மொழியியல் என்ற துறைகளைச் சேர்ந்த அறிஞர் சந்தேகத்துக்கு இடமின்றி நிறுவியுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் வரலாற்றுப் பேராசிரியர் கலாநிதி கே. இந்திரபாலா, தனது அண்மைக்கால நூலான Tamils in Sri Lanka : Evolution of Ethnic Identity – C 300BCE to C.1200CE (Sydney) எனும் நூலில்,இந்த உண்மையயைப் பாரபட்சமின்றி வெளிப்படுத்தியுள்ளார். உண்மையான வரலாற்று நிலைமையைப் புரிந்து கொள்ளவும், அதையிட்டுத் தெளிவான அறிவைப் பெறவும்விரும்புவோர் இந்த ஆய்வினை அவசியம் படித்தல் வேண்டும். சிறந்த ஆய்வின் அடிப்படையில் அமைந்தவொரு புலமைசார் ஆக்கம் இதுவாகும். அறிஞர்களும், குறிப்பாக அரசியல்வாதிகளும் இந்த நூலை நுணுக்கமாகக் கற்றுத் தமது கருத்துக்களை மறுபரிசீலனைக்கு உட்படுத்துதல் அவசியமாகும்.

தொடரும்...

## செரங்கை

அரிசியோ, தானியங்களோ, இதுபோன்ற சிறு பொருட்களோ இருந்தால் அதை ஒரு கைநிறைய (விரித்தபடி) எடுப்பது ஒரு செரங்கை என்று அழைக்கப்படும்.

## விலை

அம்மா: அடேய் கந்தசாமி, தாத்தா தொண்டைக்கும் நெஞ்சுக்கும் இழுத்துக்கிட்டு கெடக்கறாரு, அவரு நிம்மதியா போய்ச் சேரட்டும், நீ வந்து பால் ஊத்திட்டுப் போடா.

கந்தசாமி: அட போம்மா! பால் விக்கிற விலையில ஊத்த முடியாதுமா, வேணுன்னா விரல்ல பாலத்தொட்டு வைக்கிறேன்.

அப்பாவி.

## உன்னதம்.



ஓவியம் - திரு. கண்ணன்.
எஸ்.பி.ஒ.எ. பள்ளி. அண்ணா நகர்.

உயிர் போகும்போதும்
பிற உயிர்காக்கும்
உன்னதம்.

வைரி.

# வாழ்க்கையின் மறுபக்கம்

(ஒரு இலங்கைத் தமிழனின் எதிர்நீச்சல்)

வி. பா. முகேஷ் காந்தன் அவர்கள் 1977 ஆம் ஆண்டு பிறந்தவர். இலங்கையின் நுவரேலியா பகுதியில் பிறந்தவர். தனது மூன்றாம் வயதில் அகதியாக இந்தியா வந்து சேர்ந்தார் முகேஷ்காந்தன். இலங்கையில் இவரின் குடும்பம் வசதியாக வாழ்ந்த குடும்பம். இந்தியாவிற்குள் அகதியாக வாழ்ந்தார்கள். ஆனால் வசதி வாய்ப்புகள் எதுவும் இல்லாத அனாதைக்குடும்பம் போன்ற ஒரு நிலையில்தான் இருந்திருக்கிறார்கள். உதகமண்டலம் பகுதிதான் இவர்களுக்கு அப்போத அடைக்கலம் கொடுத்தது. திரு. முகேஷ் காந்தன் அவர்கள் குடும்பதில், அவருடன் பிறந்தவர்கள் பத்துப்பேர். அவருடைய குடும்பத்தில் மொத்தம் 13 பேர்கள். பதினொரு பிள்ளைகளில் ஒருவர்கூட பள்ளிக்குச் செல்லவில்லை என்பதுதான் வேதனையான நிகழ்வு. காரணம், படிக்க



வைக்கக்கூடிய பொருளாதார வசதி அவரின் பெற்றோருக்கு இல்லை. அவருடைய குடும்பத்தில் யாருடைய திருமணமும் விமரிசையாக நடந்ததில்லை. குறிப்பாக அவரது சகோதரிகள் திருமணங்கள் ஒன்று கூட பந்தல் போட்டு, நல்லவிதமாக நடந்ததில்லை. காரணம் வசதிக் குறைவே," என்று முகேஷ் தங்களது நிலைமையைக்கூறினார்.

திரு. முகேஷ்காந்தன், ஏழாவது குழந்தை. அவருக்கு சிறுவயதில் இருந்தே ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. இளமைப் பருவம் தொட்டே அந்த நினைவு இருந்து கொண்டே இருந்தது. தனது பன்னிரெண்டாம் வயதில், சென்னைக்கு வந்துவிட்டார். சம்பாதித்து ஆகவேண்டும் என்ற நிர்பந்தம் அப்போது. தனது உழைப்பில் குடும்பத்திற்கும் உதவி செய்து கொண்டு, தனது தேவைகளையும் கவனித்துக் கொண்டு, நாம் உயர என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனையிலேயே வாழ்க்கையை நடத்தினார்.

"நாம் நமது தாயகத்திற்கு நிச்சயமாக செல்லும் நாள் வந்தே தீரும். அந்த நாள்வரை உழைத்திடுவோம். அந்த நம்பிக்கையோடு வாழ்ந்திடுவோம்"

அவருடைய உழைப்பும் முயற்சியும் வீண் போகவில்லை. படிக்காத முகேஷ் கவிஞராக, திரைப்பட இயக்குநராக இப்போது உயர்ந்திருக்கிறார். அந்நிய நாட்டில் அகதியாய் வாழ்ந்தாலும், அடைக்கலம் தந்த நாட்டில், விடா முயற்சியின் பயனாக அவர், வாழ்க்கையின் முன்னேற்றப் பாதைக்குள் நுழைந்திருக்கிறார். "என்னைப் போல அகதிகளாய் இங்கு வசிக்கும் ஒவ்வொருவருக்கும் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். உண்மையாக இருங்கள், முயற்சி செய்யுங்கள், உழைத்திடுங்கள், நிச்சயம் உயர்ந்திடலாம். அது மட்டுமல்ல, நாம் நமது தாயகத்திற்கு நிச்சயமாக செல்லும் நாள் வந்தே தீரும். அந்த நாள்வரை உழைத்திடுவோம். அந்த நம்பிக்கையோடு வாழ்ந்திடுவோம்" என்று தனது மக்களுக்காகவும் பேசுகிறார் முகேஷ். இவரின் அந்த நம்பிக்கை நிறைவேறட்டும் என்று நாமும் வாழ்த்துவோம்.

இளஞ்செழியன்.

# சஞ்சீவி பர்வதத்தின் சாரல். 4.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார்.



'இத்தாலி தேசம் இருந்து நீ இங்குவந்தாய்:
பத்துத் தினமாகப் பாங்காய் உணவுண்ண
இவ்விடுதி தன்னில் இருந்து வருகின்றாய்!
'எவ்வாறு நான் சகிப்பேன் இந்தக் கறுப்பன்
எனக்கெதிரே உட்காரந் திருப்பதனை' என்றாய்:
'தனக்கெனவே நல்உணவுச் சாலைஒன் றுண்டாக்கி
அங்கவன் சென்றால் அடுக்கும்' எனஉரைத்தாய்:
இத்தாலிச் சோதரனே! என்ன மதியுனக்கே?
செத்து மடிவதிலும் சேர்ந்து பிறப்பதிலும்
இவ்வுலக மக்களிலே என்னபே தங்கண்டாய்?
செவ்வைபெறும் அன்பில்லார் தீயபே தம்கொள்வார்,
எங்கள் பிராஞ்சியர்கள் இப்பேதம் பாராட்டித்
தங்கள் பழங்கீர்த்தி தாழ்வடைய ஒப்பார்கள்:
பேதபுத்தி சற்றும் பிடிக்காது போ! போ! போ!
பேதம்கொண் டோர்க்குப் பிராஞ்சில் இடமில்லை'

என்ற மொழிகள் இவர்காதில் கேட்டவுடன்
நன்று பிராஞ்சியர்க்கு நாக்குளிர வாழ்த்துரைத்தார்,
பின்னர் அமெரிக்கன் பேசுவதைக் கேட்டார்கள்.
அன்னவன் பேச்சும் அடியில் வருமாறு:

'நல்ல அமெரிக்கன் நானிலத்தில் வாழ்கின்ற
எல்லாரும் நன்றாய் இருக்க நினைத்திடுவான்,
பொல்லா அமெரிக்கன் பொன்னடைந்து தான்மட்டும்
செல்வனாய் வாழத் தினமும் நினைத்திடுவான்,
நல்லவனாய் நானிருக்க நாளும் விரும்புகிறேன்'
சொல்லும் இதுகேட்ட தோகையும் குப்பனும்,
'கொத்தடிமை யாகிக் குறைவுபடும் நாட்டுக்கு
மெத்ததுணை யாகியிவன் மேன்மை அடைக' என்றார்.

இங்கிலாந்து தேசம் இருந்தொருவன் பேசினான்:
இங்கிருந்து கேட்டார் இருவரும் என்னவென்றால்:
'ஓ! என் சகோதரரே! ஒன்றுக்கும் அஞ்சாதீர்!
நாவலந் தீவு நமைவிட்டுப் போகாது.
வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள்என்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்:
ஆகையால் எல்லாரும் அங்கே தனித்தனிதான்,
ஏகமன தாகிஅவர் நம்மை எதிர்ப்பதெங்கே?
பேதம் வளர்க்கப் பெரும்பெரும்பு ராணங்கள்!
சாதிச்சண் டைவளர்க்கத் தக்கஇதி காசங்கள்!
கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்
கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்,

தேன்சுரக்கப் பேசிஇந்து தேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்,
இந்த உளைச்சேற்றை, ஏறாத ஆழத்தை
எந்தவிதம் நீங்கி நமைஎதிப்பார்? இன்னமும்,
சிந்தனா சக்தி சிறிதுமின்றி மக்களுக்குத்
தம்தோள் உழைப்பிலே நம்பிக்கை தானுமின்றி
ஊறும் பகுத்தறிவை இல்லா தொழித்துவிட்டுச்
சாரற்ற சக்கையாய்ச் சத்துடம்பைக் குன்றவைத்துப்
பொற்புள்ள மாந்தர்களாய்க் கல்லாக்கி யேஅந்தக்
கற்கள் கடவுள்களாய்க் காணப் படும்அங்கே,
இந்த நிலையில் சுதந்திரப் போரெங்கே?

தொடரும்...

# மரியா மனோகர் இசையில் 'ரணம்'

வி சினிமா க்ளோபல் நெட்வொர்க் என்ற பட நிறுவனம் மிகப் பிரம்மாண்டமான முறையில் தயாரிக்கும் படம் ரணம். இப்படத்தில் முன்னணி கதாநாயகன் ஒருவருடன் வீரா என்ற புதுமுகம் ஒருவரும் நடிக்கிறார். அனைத்து பயிற்சிகளையும் பெற்று ரணம் மூலம் அறிமுகமாகிறார். கதாநாயகிகளாக மூவர் நடிக்கின்றனர். அதில் ஒருவர் சுவாசிகா. இன்னொரு கதாநாயகியா மும்பையைச் சேர்ந்த அயினா நடிக்கிறார். ஒலிப்பதிவு பாலா, இசை மரியாமனோகர். மரியா மனோகர் மிகச்சிறந்த முறையில் இசை அமைத்திருக்கிறார். இவரது இசையில் வெளிவரும் இப்படத்தின் பாடல்கள் அனைவரையும் பாடவைக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. கதை திரைக்கதை வசனம் இயக்கம் திரு. விஜயசேகரன்.



இப்படத்தின் படப்பிடிப்பு மலேசியாவில் துவங்கியது. தற்போது சென்னையில் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. சினிமாத்தனம் இல்லாத யதார்த்தமான படைப்பாக உருவாகி இருக்கிறது ரணம்.

## பாண்டிய மன்னர்களின் அரசியல்.

### கிராமசபை:

பாண்டியரது ஆட்சிக் காலங்களில் ஊர்தோறும் கிராமசபையிருந்தது. இச்சபையினரே அங்கு நடைபெற வேண்டிய எல்லாவற்றையும் நிறைவேற்றி வந்தனர். சுருங்கச் சொல்லுமிடத்து, அந்நாளில் கிராம ஆட்சி முழுமையும் இச்சபையாரால்தான் நடத்தப்பட்டு வந்தது எனலாம். இச்சபையின் உறுப்பினர் எல்லோரும் பொதுமக்களால் குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள். சிற்றூர்கள் சிலவற்றை ஒன்றாகச் சேர்த்து அங்கு கிராமசபை அமைத்து வந்தனர்.

நிலமும், சொந்தமனையும், கல்வி அறிவும் உடையவர்களாய் அறநெறி பிறழாது நடப்பவர்களே சபையின் உறுப்பினராதற்கு உரிமையுடையவர் ஆவர்.

கிராமசபையில் சில உட்கழகங்களும் இருந்தன. அவை, சம்வற்சர வாரியம், தோட்ட வாரியம், ஏரி வாரியம், பொன் வாரியம், பஞ்சவார வாரியம் என்பன. நியாயம் வழங்குவதும், அறநிலையங்களைக் கண்காணிப்பதும் சம்வற்சரவாரியத்தினது கடமையாகும். நீர் நிலைகளைப் பாதுகாத்துப் பயன்படச் செய்தல் ஏரிவாரியர்க்குரியது. பஞ்சவார வாரியர் என்போர் அரசனுக்குக் குடிகள் செலுத்த வேண்டிய நிலவரியையும் பிறவரிகளையும் வாங்கி அரசாங்கப் பொருள் நிலையத்திற்கு அனுப்புபவர் ஆவர். கிராம சபையின் உறுப்பினரைப் பெருமக்கள் எனவும், ஆளுங்கணத்தார் எனவும் கூறுவர். இவர்கள் ஏதேனுங்குற்றம் பற்றி இடையில் விலக்கப்பட்டாலன்றி ஓராண்டு முடிய எவ்வகை ஊதியமும் பெறாமல் தம் வேலைகளைச் செய்தற்கு உரிமையுடையவராவார். இவர்கள் கூடித் தம் கடமைகளை நிறைவேற்றுதற்கு ஊர்தோறும் பொது மன்றங்கள் இருந்தன. சில ஊர்களில் திருக்கோயில் மண்டபங்களை இன்னோர் தம் கருமங்களைப் புரிவதற்குப் பயன்படுத்திக் கொள்வதும் உண்டு.

சபையின் உறுப்பினரைக் குடவோலை வாயிலாகத் தெரிந்தெடுக்கும் முறைகள் தொண்டை மண்டலத்தில் உத்தரமேரூரிலுள்ள ஒரு கல்வெட்டில் விளக்கமாகவும் விரிவாகவும் வரையப்பட்டுள்ளன. அவை முதற்பராந்தக சோழனது ஆணையின்படி கி. பி. 921 இல் பொறிக்கப்பெற்றன. அம்முறைகளே நம் தமிழகம் முழுவதும் பரவியிருந்தவை என்பதிற் சிறிதும் ஐயமில்லை. ஆயினும் சில இடங்களில் ஊர் நிலைமைக் கேற்றவாறு சிற்சில விதிகளை மாற்றியும் இன்றியமையாதவற்றைச் சேர்த்தும் உள்ளனர் என்பது சில ஊர்களில் காணப்படும் கல்வெட்டுக்களால் தெரிகிறது. எனவே, அரசாங்க அதிகாரிகளின் முன்னிலையில் ஊர்ச்சபையார் கிராம ஆட்சிக்கு உரிய புதிய விதிகளை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமை பெற்றிருந்தமை புலனாதல் அறிக.


திருநெல்வேலியிலிருந்த சங்கரநயினார் கோயிலுக்குச் செல்லும் பெருவழியில் ஒன்பது மைல் தூரத்திலுள்ள மானூரில் காணப்படும் ஒரு கல்வெட்டு, கிராம சபையின் உறுப்பினராவதற்கு உரியவர்களின் மிகக் குறைந்த தகுதிகள் யாவை என்பதை விளக்குகிறது. இது மிக்க பழமை வாய்ந்த கல்வெட்டாகும். எனவே, பாண்டி மண்டலத்தில் கிராம சபையின் உறுப்பினரைத் தெரிந்ததெடுத்தற்குக் கையாண்ட முறைகள் தமிழகத்திலுள்ள பிற மண்டலங்களிலும் வழங்கி வந்தவைகளே என்பது தெளிவாதல் காண்க.

கடைச்சங்கப் புலவருள் ஒருவராகிய மதுரை மருதனிலநாகனார் என்பார், 'கயிறு பிணிக் குழிசி யோலை கொண்மார் - பொறிகண்டழிக்கு மாவணமாக்களின்' என்று அகப்பாட்டில் கூறியிருத்தலின் அந்நாளிலும் குடவோலை எடுக்கும் வழக்கு இருந்தமை அறிய இயலுகிறது.

தொடரும்.....

வேல். வளையாபதி.

# விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ தேர்தல்முறை.



"விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம்", என்கிற கருத்தாக்கத்தை மிக வலுவாக தமிழக மண்ணில் முன் மொழிந்தவர் அயோத்திதாசப் பண்டிதர் (1845-1914) ஆவார். ஆங்கிலேயர் ஆட்சியின் நீட்சியாக காலனிய ஜனநாயகம் உருவான காலகட்டங்களில் குறிப்பாக சைமன் குழு அறிக்கைக்குப் பின் இந்திய அரசியல் தலைவர்களால் 'பிரதிநிதித்துவம்',





இடஒதுக்கீடு, தனித்தொகுதி, இரட்டை வாக்குரிமை, மற்றும் மாகாண சுயாட்சி என்கின்ற கருத்துக்களை முன்வைத்து விவாதங்களும் கோரிக்கைகளும் முன்மொழியப்பட்டன. இத்தகைய கருத்துக்களை மதச் சிறுபான்மையினரும், தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் மிக வலிமையாக முன்வைத்தனர்.

பிரதிநிதித்துவம், இடஒதுக்கீடு என்ற கருத்துகளுக்கு நேர் எதிரான மாற்றுக் கருத்தாக்கத்தை பெரும்பான்மை ஆதிக்கச் சமூகத்தைச் சார்ந்த தலைவர்கள் கட்டமைத்தனர். குறிப்பாக நேரு, காந்தி, வல்லபபாய் பட்டேல், மகாவீர் தியோகி, இராதாகிருஷ்ணன் மற்றும் பல காங்கிரஸ்வாதிகள் மிகக்கடுமையாக எதிர்த்ததோடு மட்டுமில்லாது அதனை முன்மொழிந்தவர்களை கடுமையாக எச்சரிக்கவும் செய்தனர். இவர்கள் முன்மொழிந்த ஒற்றைக்கோட்பாடு "கலப்படமற்ற தூய்மையான ஒருமைத்துவ தேசியம்" என்பதாகும். இதன் உள்ளீடு மதச்சிறுபான்மையினரோ, சமூகச் சிறுபான்மையினரோ, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதியினரோ பங்கேற்காத அல்லது பங்கேற்க முடியாத தேசியம் என்பதனைக் கொண்டதாகும். பெரும்பான்மை ஆதிக்கச் சமூகத்திற்குள் பன்மைத்துவ பண்பாடுகளுடைய பல குழுக்கள் அல்லது சமூகங்கள் தங்களின் தனித்துவம் இழந்து அடங்கி இருக்க வேண்டும் என்கின்ற ஒற்றைக் கலாச்சார தேசியத்தையும் அதற்கான கலாச்சார ஜனநாயகத்தையும் கட்டமைத்ததில் வெற்றியும் கண்டார்கள். இவர்களின் ஒட்டுமொத்த முழக்கம் "ஒருமைத்துவ ஜனநாயக மதச்சார்பற்ற அரசு" என்பதாகவே இருந்தது.

வட்டமேசை மாநாட்டிற்குமுன் நேருவின் பார்வை என்ன என்பதை 1928 ஆம் ஆண்டு நிறைவேற்றி இந்திய தேசியகாங்கிரஸின் தீர்மானத்திலிருந்தும் அறிக்கைகளிலிருந்தும் புரிந்து கொள்ளலாம். அதாவது இந்திய ஜனநாயகம் என்பது அனைவரையும் விகிதாச்சார பிரதிநிதித்துவப்படுத்துகின்ற

ஜனநாயக ஆட்சியாக இருக்க வேண்டும். அதுவே இங்குள் பல்வேறு சமூகங்களின் அச்சத்தை அகற்றுவதுடன் இந்நாட்டின் எதிர்கால பல்வேறு குழப்பங்களுக்கான தீர்வாகவும் அமையும், என்பதாகும்.

ஆனால், தன்னுடைய நிலைப்பாட்டை 1930 க்குப் பிறகு மாற்றிக்கொள்கின்ற போக்கை 1949 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற விவாதத்தின் முடிவில் சிறுபான்மையினருக்கான இடஒதுக்கீடு நீக்கப்பட்டவுடன் நேரு தெரிவித்த கருத்து அவரின் நிலைப்பாட்டை தெளிவாக விளக்குகின்றது. (It is this view of nationhood, though secular democratic but Majoritarian centralized Unitarian, which explains why Nehru expressed exulatation over it calling it ' a historic turn in our destiny' when in May 1949, the Draft Articles 292 and 294 providing for reservation of seats for minorities were scrapped. Constituent Assembly Debates (CAD), Vol. VIII, page 332) He expressed the opinion, contrary to the views expressed in his Note on Minorities of 1930. that any demand of safeguards




**சிறந்த நகைச்சுவை துணுக்குகளுக்கு பரிசு!**

சிறந்த நகைச்சுவை துணுக்குகளை அனுப்புவோருக்கு பரிசுகளை, முற்றம் தர இருக்கிறது. நகைச்சுவை துணுக்குகளுடன் ருபாய் ஐம்பதை அனுப்ப வேண்டும். (பணவிடை அல்லது வரைவோலை) துணுக்குகள் ஐந்து வரிகளுக்கு மிகக்கூடாது. ஒவ்வொரு துணுக்குக்கும் ஒரு நுழைவுக் கட்டணம் அனுப்பப்பட வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி

'முற்றம்'

எண்.13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம், சென்னை 600 024.

தொலைபேசி 8056281971. 044 43039632, E-Mail: mutram2010@gmail.com

by minorities betrated a lack of trust in the majority. He was however graceful enough to call it an act of faith above all for the majority community because they will have to show after this that they can behave to others in a generous, fair and just way. "Let us live up to that faith." CAD. Vol.VIII,p. 332)

சிறுபான்மையினருக்கான இடஒதுக்கீட்டு நீக்கத்தை தாம் அடைந்த வரலாற்று எல்லை, என்பதாகவும் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தை நம்பிக்கையுடன் ஏற்று நடப்போம் என்கிற அழைப்பு விடுத்தலும் அவரின்




பார்ப்பனிய தேசியத்தின் முழக்கங்களாகவே எதிரொலிக்கிறன்றது.

1947 ஆகஸ்டு 27 28 தேதிகளில் நடைபெற்ற நாடாளுமன்ற விவாத அவையில் மக்கள்தொகை அடிப்படையில் இடஒதுக்கீட்டு பரிந்துரையை நாடாளுமன்ற ஆலோசனைக்குழு முன்வைத்தபோது அக்கருத்தினை முழுமையாக எதிர்த்தவர் எஸ். இராதாகிருஷ்ணன். இந்த அவையில் எங்களின் விருப்பம் சிறுபான்மையினரை நிரந்தரமாக்குவது என்பதை விரும்பவில்லை. இத்தகைய குழப்பங்களை உருவாக்கும் காரியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.(It is not our desire in this house to have these minorities perpetuated. We must put an end to the distruptive elements in the state.) Constituent Assembly Debates (CAD) Vol.V,p 283. இது கலப்படமற்ற தூய்மையான ஒருமைத்துவ தேசியத்திற்கான குரலாக வலுவாக கட்டமைக்கப்பட்டதற்கான மற்றொரு சான்றாகும்.

இத்தகைய எதிர்ப்புகள் இருந்தபோதிலும் ஜனவரி 8, 1948 இருந்து ஜனவரி 4, 1949 வரை நடைபெற்ற நாடாளுமன்ற விவாத அவையில் விகிதாச்சார பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதை இசட்.எச். லாரி, ஹூசேன் இமாம், குறிப்பாக சந்திரசேகரய்யா சமூக, அரசியல் மற்றும் எல்லையோர சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை ஒற்றை மாற்று வாக்களிப்பு அல்லது ஒற்றை மாற்ற இயலா மாற்று வாக்களிப்பு முறையைக் கொண்ட விகிதாச்சார பிரதிநிதித்துத் தேர்தல் முறை வேண்டும் என்று வாதிட்டார்.

சுஷி ஷியாத் கரிமுதின் இடஒதுக்கீட்டிற்குப் பதிலாக விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையின் மொத்த வாக்களிப்பு முறையில் தேர்ந்தெடுக்கும் முறை வேண்டும் என்று வாதிட்டார். இவர்களுடன் கே.டி.ஷா, மகபூ அலி பெய்க் மற்றும் சர்தார்ஹூக்கும் விகிதாச்சார பிரதிநிதித்துவத்திற்காக வாதிட்டனர். சக்பீன்லால் சக்சேனா மற்றும் மொகைன் போன்றோர் அரசியில் காரணங்களுக்காக வரவேற்றாலும் நடைமுறையில் சற்றுக் கடினம் என்றனர். இவர்கள் கூறிய கருத்தில் நியாயம் இருப்பினும் சர்தார் பட்டேல் போன்றவர்களால் விகிதாச்சார பிரதிநிதித்துவம் என்பது தேசிய ஒர்மையை பாதிக்கும் கருத்தாக எதிர்க்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

தொடரும்...

பணி.வ.செபாஸ்டியன், ச,ச.
மாநில ஒருங்கிணைப்பாளர்,
செரி,
தமிழ்நாடு.

# கோந்தைப் பந்து
## (எறி பந்து)

மகராசனுக்கு அன்று முழுதும் மண்டைக் குடைச்சலாகவே இருந்தது. நேற்று விளையாடிய கோந்தைப் பந்து விளையாட்டில், தன்னையே குறிவைத்த எறிந்தானே அந்த பெரியநாயகம், ஏன் அவன் அப்படிச் செய்தான் என்றுதான் அவனுக்கு விளங்கவில்லை.



நண்பர்கள் எத்தனை பேர் சேருகிறார்களோ, அவர்கள் இரு பிரிவாகப் பிரிந்து விளையாடுவதுதான் வழக்கம். நேற்று விளையாட வந்த நண்பர்களின் எண்ணிக்கை சற்றுக் குறைந்துதான் போய்விட்டது. ஒவ்வொரு பக்கத்துக்கும் நான்கு பேர்தான் இருந்தார்கள். மகராசனுக்கு மற்றொன்றும் தோன்றிற்று. குறைவான நண்பர்கள் இருந்ததால் அவன் நம்மையே குறிவைப்பதுபோல் நமக்குத் தோன்றியதோ என்றும் கூட நினைத்தான். மகராசனுக்கு எப்போதுமே நல்ல பழக்கம் உண்டு. நண்பர்களை ஒருபோதும் அவன் எதிரியாக எண்ண மாட்டான். அவர்கள் தவறி ஏதாவது தீங்கு செய்தாலும், அவர்களை மன்னித்து நட்பைத் தொடருகிறவன் மகராசன்.



அழகிய நாயகத்தையும் அவ்வாறே எண்ணினான். 'சரி இன்றும் விளையாடப் போகிறோம், என்ன நடக்கப்போகிறது என்று பார்க்கலாம்' என்று நினைத்துக் கொண்டு, அந்தக் குழப்பத்தை குழிதோண்டிப் புதைத்துவிட்டு குதித்தோடிப் போனான் விளையாட. அவனுக்கு முன்பாக நாலைந்துபேர் வந்திருந்தனர். விளையாடப்போகிறவர்களின் எண்ணிக்கை நேற்றுக்கு இன்று கூடுதலாகத்தான் இருக்கும் என்று தனக்குள்ளே ஒரு எதிர்பார்பை ஏற்படுத்திக்கொண்டான். அவன் எதிர்பார்ப்பு நிறைவேறத்தான் செய்தது. பதினெட்டுப் பேர்கள் சேர்ந்துவிட்டனர். அணி பிரிக்க ஆரம்பித்த போது, அழகிய நாயகம் எந்த அணியில் இருக்கிறானோ அந்த அணியிலேயே நாமும் இருக்கலாம் என்ற நினைவுடன் அமைதியாக இருந்தான் மகராசன்.

மகராசன், அழகிய நாயகம் இருக்கும் அணிக்குச் செல்ல விருப்பம் தெரிவித்தான். ஆனால் அழகிய நாயகமோ நான் எதிர் அணிக்குப் போகிறேன், நீங்கள் அவனைச்

சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு எதிர் அணிக்குப் போய்விட்டான். இதற்குமேல் நாம் எதுவும் பேசக்கூடாது என்று அமைதியாக இருந்துவிட்டான் மகராசன். நண்பர்களும் இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இதைப்போல் பலபேர் பலமுறை செய்திருக்கிறார்கள் என்பதால், அவர்களுக்கு அது சாதாரணமாகவே தோன்றியது.

ஒரு மதிலுக்குப் பின்புறம் கோந்தை ஒன்று வைக்கப்பட்டது. இரு அணிகளில் முதலாவதாக மகராசன் அணி கோந்தையை எறிந்தது. ஒவ்வொருவருக்கும் மூன்று வாய்ப்புகள் உண்டு. கோந்தையை சாய்க்காமல் மதில்மேல் பட்டு வரும் பந்தைப் பிடிப்பதற்காக எதிர் அணியினர் சுற்றி நின்று கொண்டனர். மகராசன் குழுவில் முதல் நபர் எறிந்த முதல் பந்து கோந்தையையும் சாய்க்கவில்லை. எதிர் அணி கைகளிலும் அகப்படவில்லை.

இரண்டாவது முறை எறியும்போது மதில்மேல் பட்டு எதிர் அணியில் இருந்த சந்திரவாசகம் கைகளுக்குள் அடைக்கலமாகிவிட்டது.



கொண்டு, எதிர் அணிக்குத் தெரியாத வண்ணம், பந்தை யார் கையில் வைத்துக் கொள்வது என்று கலந்து பேசி, மகராசன் கையில் கொடுத்தனர். மற்ற அனைவருமே பந்தை தங்கள் கைகளில் வைத்திருப்பது போல் சட்டைக்குள் கையை விட்டுக் கொண்டிருந்தனர். மகராசன் அணியினர் அனைவரும் தங்களிடம்தான் பந்து இருக்கிறது. வந்தால் எறிந்து விடுவேன் என்று அச்சமூட்டிக் கொண்டிருந்தனர். பந்தை கையில் வைத்திருப்பவர் எதிர் அணியில் உள்ள யாரையாவது எறிந்துவிட்டால் விளையாட்டு முடிவுக்கு வந்து, அவர்களே மறுபடியும் கோந்தையை எறியும் வாய்ப்பைப் பெற்றுவிடுவார்கள். இதுதான் விதி.



அவ்வாறு இல்லாமல் பந்து எதிர் அணியினர் யார்மீதும் படாமல் எறியப்பட்டாலும், பந்து வைத்திருப்பதுபோல் நடிப்பவரில் யாரையாவது ஒருவரை எதிர் அணியினர் தொட்டுவிட்டாலும் விளையாட்டு முடிவுக்கு வந்து விடும். எதிர் அணியினர் கோந்தையை எறிய தகுதி உள்ளவர்களாக மாறிவிடுவர்கள். எதிர் அணியினர் கோந்தையை தொட்டுவிட்டாலும் அடுத்து விளையாட அவர்களே தகுதி படைத்தவர்களாகி விடுவர்கள். கோந்தையை தொட்டுவிடாதபடி பாதுகாத்துக் கொண்டே எதிர் அணியினரை எறிவதில் கவனம் செலுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

மகராசன் அணியின் இரண்டாவது ஆளாக மனோகர் பந்தை எறிந்து கோந்தையைச் சாய்த்துவிட, கோந்தையை சாய்த்த பந்தைப் பிடித்தும் பயனின்றி போய்விட்டது.

கோந்தையை சாய்த்துவிட்டாலே, அந்த அணி வென்றதாகத்தான் பொருள். அழகிய நாயம் அணியினர் கொஞ்ச தூரம் விலகிச் சென்று நின்று கொண்டனர். மகராசன் அணியினர் இடைவெளி தெரியாமல் நின்று

மகராசன் எதிர் அணியில்

யாரையாவத ஒருவர் மேல் பந்தை எறிந்து, அடுத்த விளையாட்டையும் தாங்களே தொடர வேண்டும் என்பதில் கவனமாய் இருந்தான். ஆனால் அழகிய நாயகத்தை மட்டும் அவன் குறிபார்க்கவில்லை. யாரிடம் பந்து உள்ளது என்பதை வெகு நேரமாகியும் எதிர் அணியினரால் கண்டுபிடிக்க இயலவில்லை. மகராசன் சரியான தருணம் பார்த்து எதிர் அணியில் ஒருவனைப் பார்த்து பந்தை எறிய, அது சரியாக அவன்மேல் பட்டது. எல்லோரும் மகராசனைப் பாராட்டினர். அந்த விளையாட்டு முடிந்து அடுத்த விளையாட்டு தொடங்கியது. மகராசன் அணியே தொடர்ந்தது.



மகராசன் அணியே கோந்தையை பந்தால் அடித்துச் சாய்த்து, பந்து எறிவதற்குத் தகுதி பெற்றது. இம்முறை வேறொருவன் கையில பந்து தரப்பட்டது. பந்து இல்லாதவனை எதிர் அணி தொட்டுவிட விளையாட்டு எதிர் அணியின் ஆளுகைக்குள் போய்விட்டது. அழகிய நாயகத்தின்அணி கோந்தையை சாய்த்து பந்தை எறியும் வாய்ப்பைப் பெற்றது. அந்த அணியில் யார் கையில் பந்தைக் கொடுப்பது என்று தீர்மானிக்க எல்லோரும் கூடிநின்று முடிவெடுக்க முனைந்தபோது, அழகிய நாயகம் பந்தை தன்னிடம் தருமாறு கோரினான். ஆனால் மகராசனிடம் பந்தால் அடி வாங்கிய பார்த்திபனோ, "என்னிடம் கொடுங்கள் அந்த மகராசனை நான் பழிக்குப் பழி வாங்கவேண்டும்" என்றான். அழகிய நாயகமோ "டேய் உனக்கு மகராசன் அடி வாங்கணும் அவ்வளவுதானே, நேத்து அவனுக்கு கொடுத்தேன் பாத்தியா அதே மாதிரி இன்னிக்கும் கொடுப்பேண்டா எங்கிட்ட பந்தக் கொடு" என்று வாங்கிக் கொண்டான். மகராசனையே குறிவைத்துக் கொண்டிருந்தான், இதை அறிந்து கொண்ட மகராசன் அவன் அருகில் வராமலேயே விலகி விலகி விளையாடிக் கொண்டிருந்தான். ஆனால் அழகிய நாயகம் அவனை எறிந்தே விட்டான். அன்று வாங்கிய அடியைவிட இன்று அதிகமாக வலித்தது மகராசனுக்கு. ஏன் நம்மை குறிவைக்கிறான் என்று அவனுக்கு விளங்காமலே இருந்தது. தன்னிடம் பந்து இருந்தும் அவன் மேல் எறியாமல் இருந்தோம், ஆனால் இவன் நம்மையே வலிய வந்து அடிக்கிறானே என்ற மன அழுத்தம் மகராசனை வெகுவாகப் பாதித்தது.

விளையாட்டு தொடர்ந்தது. முடியும்வரை காத்திருந்த மகராசன். விளையாட்டு முடிந்ததும் நேராக அழகிய நாயகத்திடம் சென்று, "ஏன்டா என்னை தொடர்ந்து அடிக்கிறே? நான் உனக்கு என்ன செய்தேன்" என்று கேட்டான். அதற்கு அவன் நான் வேணும்னு செய்யல, இது விளையாட்டு நீ எதிர் அணில இருந்தே அடிச்சேன்" என்று கூறிச் சென்று விட்டான். அவர்கள் அருகில் இதைக் கேட்டுக் கொண்டிருந்த குமரன், மகராசனிடம் வந்து "என்னடா உனக்கு விவரம் தெரியாதா? உங்க அப்பாவுக்கும் அவன் அப்பாவுக்கும் முந்தாநாள் வாய்க்காத் தகராறு உங்க அப்பா அவன் அப்பாவ அடிக்கப் போயிட்டாரு, அப்புறம் பக்கத்துல இருந்தவங்க எல்லாம்

வந்து தடுத்து நிறுத்தினாங்களாம். நம்ம பள்ளிக்கூடத்துக்குப் போனதுக்கப்புறம் நடந்ததாம். அத மனசுல வச்சுக்கிட்டுதான் அந்தப் பய உன்னை குறிபார்த்து அடிக்கிறான்" என்றான்.



வீட்டுக்கு வந்த மகராசன் அம்மாவிடம் அன்று நடந்தவைகளைக் கேட்டுக் கொண்டான். அடுத்தநாள் சற்று முன்பதாகவே பள்ளி செல்கிற வழியில், ஓரிடத்தில நின்று கொண்டான். அழகிய நாயகத்தின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தான். சிறிது நேரத்தில் அழகியநாயகம் மற்ற இருவருடன் வந்து கொண்டிருந்தான். அருகில் வந்தபோது டேய் நாயகம் கொஞ்சம் நில்லுடா நான் உன்கிட்ட பேசணும் என்றான் மகராசன். அவனோ என்கிட்ட என்ன பேச்சு? என்று நடக்க எத்தனித்த அவன் கைகளை பிடித்துக் கொண்டான் மகராசன்.



உன் அப்பாவும் என் அப்பாவும் சண்டை போட்டாங்கன்னா அது பெரியவங்க விசயம். அதுல எது சரி எது தப்புன்னு நமக்குத் தெரியாது. நீ அதை மனசுல வச்சிக்கிட்டு என்னைய எதிரியா நெனக்கிறது தப்பு. நீ என்னைய பந்தால அடிச்சத எங்க அப்பாகிட்ட சொன்னா என்னாகும்? பெரியவங்க இன்னும் சண்டை போட ஆரம்பிச்சுடுவாங்க. அதனாலதான் நான் வீட்ல சொல்லல. அதுமட்டுமில்லை. எங்கிட்ட பந்து இருந்தப்போ உன்னைய என்னால அடிக்க முடியாதா? நம்ம ஊர்லயே, கரட்டாண்டிய குறிபார்த்து அடிக்கிறவன் நான் மட்டும்தான்னு உனக்கும் தெரியும். உன்னைய குறி பார்த்து அடிக்க என்னால முடியாதா? இது விளையாட்டு இதுல பகை உணர்ச்சி எல்லாம் வச்சுக்கக் கூடாது.

இன்னிக்குப் பள்ளிக்கூடம் முடிஞ்சப்புறம் என்னோட நீ என் வீட்டுக்கு வா, என் அப்பா, அம்மா உன்னைய வான்னு சொல்றாங்களா? வராதேன்னு சொல்றாங்களான்னு பாரு, நீ எங்க வீட்டுக்குக் கூட வரவேண்டாம், நான் உங்க வீட்டுக்கு வரேன், உங்க அப்பா, மகராசா எங்க வீட்டுக்கு வராதடா போயிடுன்னு சொல்லுவாரா? அதெல்லாம் சொல்லமாட்டாங்க. பெரியவங்களுக்குள்ள ஆயிரம் இருக்கும் நமக்கெதுக்குடா அதெல்லாம்? என்றான்.

அழகிய நாயகம் யோசித்தான். நீ சொல்றதும் சரிதாண்டா. என்னைய மன்னிச்சுக்கோடா என்றான். இருவரும் சேர்ந்தே பள்ளி சென்றனர். மாலையில் பள்ளி முடிந்ததும் சேர்ந்தே வந்தனர். அழகிய நாயகம் தன்னையும் மறந்து மகராசன் வீட்டுக்கே வந்துவிட்டான்.

மகராசனின் அம்மா வாப்பா நாயகம் நல்லா படிக்கிறியா என்று மகிழ்வோடு கேட்டாள். காலையில் நண்பன் சொன்னதை நினைத்துக் கொண்டான் அழகிய நாயகம்.

நல்லாப் படிக்கிறேன் என்றான். மகராசனின் அம்மா இருவருக்கும் மோர் கொடுத்தார்கள். அதைப் பருகிவிட்டுதனது வீட்டுக்கு வந்து சேர்ந்தான் அழகிய நாயகம். வீட்டில் பையை இறக்கி வைத்துவிட்டு, அம்மாவிடம் “அம்மா நான் விளையாடப்போறேன்” என்றான். அவனது அம்மாவோ, நாயகம் இந்தாடா பொரிஅரிசி என்று அவனது கையில பொரி அரிசியைக் கொடுத்தாள். அம்மா இன்னும் கொஞ்சம் கொடுங்கம்மா. மகராசன் வருவான் அவனுக்கும் கொடுக்கணும் என்றான். நாயகத்தின் அம்மா இன்னொரு கை அள்ளித் தந்தாள். மகிழ்ச்சியுடன் ஓடி வந்த நாயகம் மகராசன் வரும் வரை காத்திருந்து, அவனுக்கும் மற்ற நண்பர்களுக்கும் பொரி அரிசியைக் கொடுத்து தானும் சிறிது தின்று விட்டு விளையாட ஆரம்பித்தான் நண்பர்களுடன். இப்போதுதான் கோந்தைப் பந்து விளையாட்டு விளையாட்டாகவே இருந்தது. நண்பர்கள் நிறைந்த மகழ்வுடன் விளையாடினர்.



## கோந்தை.

கோந்தை என்பது பனங்கொட்டையை கிழங்குக்காக மண்ணில் பதித்துப் பின்னர் கிழங்கை வெட்டி எடுக்கும்போது, அந்த பனங்கொட்டை பயனற்றதாகி, கிழங்குடன் பிடிப்பின்றி விழுந்துவிடும். அதை எடுத்து, சிறிது மண்கூட்டி, நிமிர்த்திவைத்து, பந்தால் அதை எறிந்து விளையாடுவர் சிறுவர். அந்தக் கோந்தை விறகாகவும் பயன்படும். நன்றாக எரியும் தன்மை கொண்டது. பனைமரத்தின் பயன்களில் இதுவும் ஒன்று.

**தமிழீழத் தேசிய மரமான பனை, தமிழர்களைப் போலவே என்றென்றும் பிறருக்காகவே வாழ்ந்து சிறக்கும் மரமாகும்.**

விசவனூர். வே. தளபதி.

## சிறுகதைப் போட்டி

உங்களது சிறுகதையை எங்களுக்கு அனுப்புங்கள், சிறந்த சிறுகதைக்கு பரிசு உண்டு. ஒருவர் பல சிறுகதைகள் எழுதலாம் ஆனால் தனித்தனியாகவே அனுப்ப வேண்டும். தகுதி பெற்றோர் நடுவர்களாக இருந்து சிறுகதைகளைத் தேர்ந்தெடுப்பர். முதல் மூன்று நிலைகளில் தேர்ச்சியுறும் சிறுகதைகளுக்கு பணமுடிப்பு வழங்கப்படும். சிறுகதைகளை திருத்துவதற்கும், சிறுகதைத் தொகுதியில் அச்சிடுவதற்கும் 'முற்றம்' இதழின் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு .நிபந்தனைகளுக்கு உட்படுவோர் மட்டும் சிறுகதைகளை அனுப்பவும். சிறுகதைகள் மூன்று பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். புகைப்படத்துடன் அனுப்பவும். நுழைவுக் கட்டணம் : ரு.150.

*முகவரி:*
*முற்றம்*
*நிர்வாக அலுவலகம்*
*எண். 13 / 5 புத்தா தெரு, இரங்கராஜபுரம், சென்னை 600 024.*
*தொலைபேசி 8056281971.* E-Mail: mutram2010@gmail.com

# பந்தாடப்படும் மக்கள் நலப் பணியாளர்கள்.

தமிழ்நாட்டில் 1989 ஆம் ஆண்டு தி மு க ஆட்சி அமைந்தபோது சுமார் பதின்மூன்றாயிரம் மக்கள் நலப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டனர். அவர்களும் தங்களுக்கு வேலை கிடைத்துவிட்டது, தங்கள் குடும்பத்தையும் பிள்ளைகளையும் சிறப்பாக கவனிக்கலாம், சமுதாயத்தில் நாமும் ஓர் உயர்ந்த நிலையை எட்டலாம் என எண்ணி வாழ்க்கையை நகர்த்தினர். 1991 ஆம் ஆண்டு அவர்களது வாழ்வில் முதல் இடி விழுந்தது. தி மு க ஆட்சி அகன்று அ தி மு க ஆட்சி வந்தவுடன் முதல்வர் ஜெயலலிதா அரசு மக்கள் நலப் பணியாளர்களையும் சாலைப்பணியாளர்களையும் சேர்த்து சுமார் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்களை வீட்டுக்கு அனுப்பியது.

அந்த பணியாளர்கள் அத்தனை பேரும் போராடினர், அழுது உருண்டு பார்த்தனர், சிலர் உயிரையும் மாய்த்துக் கொண்டனர். என்றாலும், அந்த உள்ளம் உருகவில்லை. காலம் கடந்தது. மீண்டும் தி மு க ஆட்சிக்கு வந்தது. அந்தப் பணியாளர்கள் அனைவருக்கும் மறுபடி பணி வாய்ப்புத் தரப்பட்டது. அதன் பின்னர் வந்த ஜெ அரசு, அந்தப் பணியாளர்களுக்கு தி மு க வினர் என்ற முத்திரையைக் குத்தி, திரும்ப வீட்டுக்கு அனுப்பியது. அவர்களும் கூலிவேலை, கட்டட வேலை, சித்தாள் வேலை என்று சிறுசிறு நிலையில்லா வேலைகளைச் செய்து வயிறு கழுவி வந்தனர். மீண்டும் திமுக ஆட்சி வந்தது, வேலை கிடைத்தது, மறுபடியும் ஆட்சி மாற்றம் மக்கள் நலப் பணியாளர்களை வீட்டுக்கு அனுப்பியுள்ளது ஜெ அரசு.

நாம் முதல்வரின் கவனத்திற்கு கொணர்வது என்னவென்றால், மக்கள் நலப்பணியாளர்களின் தற்போதைய வயது 45 ஐ கடந்துவிட்ட சூழலில், அவர்களின் அடிப்படை வாழ்வாதாரமான அவர்களது பணியை பிடுங்கிக் கொண்டதன் மூலம், அவர்கள் இனி இந்த வயதில் எந்த வேலைக்குச் சென்று எப்படி தங்களது குடும்பத்தைக் காப்பாற்ற முடியும்? ஆகவே அவர்களுடைய வயதையும், குடும்பப் பாரங்களையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு பணியினை நிரந்தரமாக ஆக்கித் தரவேண்டியது முதல்வரின் கடமையாகும். முதல்வர் சொல்வது போல் அவர்கள் தி மு க வினராக இருந்தாலும், இந்த நாட்டின் குடிமக்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. குடிமக்களை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு பணி வழங்கி வாழ வைக்க வேண்டுமென்பதே அனைவரது வேண்டுகோளாகும்.

வேல். வளையாபதி.

# வெற்றி? தோல்வி?

வெற்றி என்ற
நிலையையும்
தோல்வி என்ற
நிலையையும்
ஒன்றாய் உணர்வதே
எனது நிலை.

# பணம்!.

ஏழைக்குத் துன்பம்
ஏராளம்!
தீர்வு
ஒன்றே ஒன்றுதான்
அது?
பணம்!.



வைரி.

# முல்லா பெரியாறு?



இண்டு நாளிதழ், முல்லைப் பெரியாறு பற்றிய செய்திகளை வெளியிடும் போது, முல்லைப் பெரியாறு என்று குறிப்பிடாமல், முல்லா பெரியாறு என்றே எழுதுகிறது. காரணம் என்ன? முல்லை என்பதை மலையாளத்தில் முல்லா என்கின்றனர். ஆகவே அந்த நாளிதழில் வேலைசெய்கிற மலையாளி முல்லையை முல்லா என்று எழுதுகிறான். அங்கே வேலை செய்யும் தமிழர்கள் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. 999 ஆண்டுகளுக்கு ஒரு இடத்தை குத்தகைக்குப் பெற்றிருக்கிறோம். அதன் அத்தனை உரிமைகளும் தமிழகத்துக்கு இருக்கிறன்றன. அப்படியிருக்கும்போது, நமது பெயரை மாற்ற, மாற்றிக்கூற இவர்களுக்கு என்ன துணிச்சல் என்பதை நாம் உணரவேண்டும். இந்தத் துணிச்சல் எப்படி வந்தது. நாம் எதையுமே தட்டிக்கேட்காமல் விடுவதால்தானே.

தமிழர்களே உரிமையை விட்டுக் கொடுக்காதீர்கள். பிறர் உரிமைக்குள் தலையிடாதீர்கள். பொதுவாக மற்ற மக்களின் உரிமைகளுக்குள் தமிழர்கள் தலையை விடுவதே இல்லை. ஆனால் மற்றவர்கள், தமிழன் தலையில் ஏறி அமர்ந்து கொண்டு மிளகாய் அரைத்துக் கொண்டே இருக்கிறார்கள், இனி அப்படிப்பட்டவர்களின் தலையில் நாம் மிளகாய் அரைக்க ஆரம்பிப்போம். அப்போதுதான் அவர்களுக்கு வருத்தம் என்றால் என்ன என்பது விளங்கும். இண்டு நாளிதழ் இனிமேலாவது நேர்மையான முறையில் முல்லைப் பெரியாறு என்று எழுதட்டும்.

**THE HINDU**

வேர்மகள்.

## ஒரு வார்த்தைக்காக!



தோழியாக
அறிமுகமான உன்னை
நான் காதலித்ததின்
காரணம் என்ன?

இத்தனை ஆண்டுகளாக
நான் படித்த புத்தகங்களின்
ஒவ்வொரு எழுத்தும்
கவிதையாக உருவாகி
உன்னை நினைவுபடுத்துகின்றன.

பெண்ணே உன்னை வர்ணிக்க
நான் பயன்படுத்தும் தமிழ் எழுத்துக்கள்
வெட்கப்படுகின்றன, ஏனெனில்
இத்தனை அழகு படைத்த
உன்னை வர்ணிக்க இன்றுவரை
காத்திருக்க நேரிட்டதே என்று!

என் காதல் உணர்வுகளை
அரங்கேற்றி விட்டேன், கவிதை மூலம்.
ஏனோ உன்னைப் பார்த்து பேச
இயலவில்லை.

பெண்ணே, எனக்குள் வன்முறை,
போராட்டம், இதயமும் துடிக்க மறுக்கிறது,
இரத்த நாளங்கள் சுரக்க மறுக்கிறது.
காரணம்
உன் பாதம் பதிய நாமிருவரும்
கரம்பிடித்துச் செல்லவில்லையே என்று!

என் வீட்டில் வீசும் காற்றே
அவளிடம் சொல்,
காலங்கள் மாறிப்போனாலும்
காதல் மொட்டுகளாக இருக்கும்
என் நினைவுகள்
ஒரு நாள் மலரும், அந்த நாளுக்காக
தவம் புரிகிறேன்.
அவள் சொல்லப்போகும்
ஒரு வார்த்தைக்காக!.

சு. முரளி,
எம்.ஜி.ஆர். நகர், மொளசூர்,
திண்டிவனம், விழுப்புரம்.

பதினைந்து வயது.

விண்ணில் திரிந்த பறவைகள்
எல்லாம்
வேடந்தாங்கல்
போகின்றன!
மண்ணில் திரியும் உறவுகள்
இருந்தும் - மனம்
உன்னைச் சுற்றியே போகிறதே!

நீ
மௌனத்தின் கனவா?
மலர்களின் நிழலா? - என்
சொப்பனம் எல்லாம்
கற்பனைதானா? - உன்
நினைவுகள் மட்டும்
அற்புதம்தானா?

ஊமைமாது நீயும்
பேச வைத்தாய் - என்
உள் மனத்தில் புயல்
வீச வைத்தாய்!
ஆமைபோல் இருந்த
என் மன உணர்வை
ஆசை வார்த்தையில்
நனைய வைத்தாய்!

நீ வரும் காலம்
கார்காலமே - நீ
இல்லா வாழ்க்கை
இலையுதிர் காலம்.

கற்பனையில் உன்னை தினம்
காணுகிறேன் - அதனால்
அற்பனாய் எண்ணி
அலட்சியப்படுத்தாதே!

நிலவில் குளித்து
நீள் கூந்தல் முடித்து
கட்டிக் கொண்டாய்
மேகப் புடவையை!

புன்னகை பூவைச்
சிந்திவிடு - இல்லை
புயலாய் மாறி
உயிரை எடு!

ஜெயங்கொண்டான்
திரைப்படப் பாடலாசிரியர்.




விலை

ஏறுகிறது

விசம்!

விலை
விசம் போல்
ஏறுகிறது
கேட்டதுண்டு நாம்.

இன்றோ
விசம்
விலையேறுகிறது

பத்து ரூபாய்
கள்ளச்சாராயம்
அன்று.

ஆயிரம் ரூபாய்
எலைட் சாராயம்
இன்று.

ஆசிரியர்.

# "5 கடவுளுக்கு"

அன்னை சரோ சிந்தனை பிலிம் புரொடக்சன் நிறுவனம் மூலம் தயாராகிக் கொண்டிருக்கும் தமிழ்ப்படம் "5 கடவுளுக்கு" பல முன்னணி கதாநாயகர்களின் திரைப்படங்களுக்கு படத்தொகுப்புப் பணியைச் செய்த எடிட்டர் ஜீவன் இத்திரைப்படத்தில் நடிக்கிறார். இயக்கம் இவரே. படப்பிடிப்பு, சென்னை, தேனி, சின்னமனூர், பெங்களூரு, ஆந்திரா, சிங்கப்பூர் போன்ற பகுதிகளில் நடைபெறுகிறது.

# நினைவுகள்...

தினம் தினம்
என்னுள்
ஒரு நத்தையின்
நகர்வைப்போல
கடந்து செல்கிறது
அவளின்
நினைவுகள்...

இங்கும் அங்கும்
அலையும்
மின்மினிப் பூச்சியின்
வெளிச்சம் போல்
அவளின்
ஞாபகங்களில்
கழிகிறது
என் வாழ்வு...

வண்ணத்துப் பூச்சியை
தேடி அலையும்
குழந்தையைப் போல
அவளின்
நினைவுகள்
தேடி அலைகிறது
மனசு...

உலகின் எல்லா
மொழிகளையும்
மொழி பெயர்க்க
தெரிந்த எனக்கு
உன் மௌனத்தின்
மொழியை மட்டும்
மொழி பெயர்க்கத்
தெரியாதது ஏன்?

உன் நினைவுகள்
சுமந்து
நடக்க
முடியவில்லை
என்னால்...

விதையாய் விழுந்து
விருட்சமாய்
வளர்ந்தது என்னுள்...
காதல்...

கண் எட்டும் தூரம் வரை
தேடிப் பார்த்தேன்
காணவில்லை
என் காதலியின்
கால் தடம்...

வேட்டவலம் முகில்.


திரைத்துறைக்கு வரத்துடிக்கும், வளரத்துடிக்கும் கலைஞர்களே! உங்களை முற்றம் இதழ் வரவேற்கிறது. உங்கள் புகைப்படத்தையும் உங்களைப்பற்றிய விபரங்களையும் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். உங்களுக்கு நாங்கள் பாதை அமைத்துத் தருகிறோம். பாடகர்கள், உங்களது குரலை குறுந்தகட்டில் பதிவு செய்து அனுப்பவும்.

முகவரி:

முற்றம்

நிர்வாக அலுவலகம்

எண். 13 / 5 புத்தா தெரு, இரங்கராஜபுரம், சென்னை 600 024.

தொலைபேசி 8056281971. E-Mail: mutram2010@gmail.com

# என்னே நந்நிக்கடன்?

கேரளப் பாடகி ஒருவர் மலையாளப் பாடலுக்கென்றால் குறைவாகவும், தமிழ்ப் பாடலுக்கென்றால் அதிகமாகவும் சம்பளம் கேட்டுப் பெறுகிறாராம், கொடுக்காவிட்டால் பாடுவதில்லையாம். இவர் தமிழ்ப்பாடல்கள் பாடித்தான் புகழ் பெற்றார் என்பது அவருக்கே தெரியும் என்றாலும், தமது தாய்மொழிப் பற்றை காட்டுகிற விதத்தில், நன்றிக் கடனை மறந்து, ஆரம்பர கால நண்பர்களிடமே இப்படி கேட்கிறாராம்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

# வாடகை உறவுகள்?

அந்நாட்களில்
திருமண வீட்டு வாயிலில்
வீட்டார் நிற்பர்
வரவேற்பர்!

இந்நாட்களில்
உறவையும்
சுற்றத்தையும், நட்பையும்
வரவேற்க
வாடகைப் பெண்கள்?

உறவுகள்
மதிப்பிழக்கின்றன.

காட்டான்.


**ஆசிரியர்**
விசவனூர். வே. தளபதி
**இணை ஆசிரியர்**
அ. வெற்றிவேந்தன் M.A., B.L.
**செய்திப் பிரிவு**
செ. ரா. சீனிவாசன் நாமக்கல்
ஆ. சூ. மைக்கேல் யாகப்பன்
**பொறுப்பாசிரியர்**
வேல். தென்னரசு
**உதவி ஆசிரியர்கள்**
அ. உமாமகேசுவரி, M.A.
ச. ஜெயச்சந்திரன்
கருமாரி கு. கர்ணா, M.A.,B.Ed.
**தலைமைச் செய்தியாளர்கள்**
வேல். வளையாபதி
த. ஞானமணி, B.Sc.,B.Ed.
**செய்தியாளர்கள்**
சிரோன்மணி
பி. பார்த்திபன், சிதம்பரம்
அ. வெங்கடேஸ்வரி, திருச்சி
மு. பிரபாகரன், கோயம்புத்தூர்
சாதிக் அலி
மு. கலைச்செல்வம்
சிவக்குமார்
செல்வராஜ்
வீ. மணிகண்டன்
சே. அப்பாஸ்
ரா. சார்லஸ்
என். ஜெயக்குமார்
**வடிவமைப்பு**
மே. லாங்ஸ்ட்டன்,B.A.,D.C.A.,Dip.DTP.
**புகைப்படக்காரர்கள்**
ரமேஷ்
நலங்கிள்ளி



நிர்வாக அலுவலகம்:
13/5, புத்தா தெரு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024
போன்: 8056281973, 9444363917.
E-Mail: mutram2010@gmail.com



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from 10/8, Kasthuri Bai Street, Gandhi Nagar, Ekkattuthangal, Chennai - 97. and Printed at **DESIGN PARK,** No. 22, Weavers Street, Triplicane, Chennai - 600 005. Editor: **V. THALAPATHI.**


ANNAI SARO SINTHANAI
FILM PRODUCTION COMPANY
Presents
N . JEEVA
Win
On Shooting..
5
Kadavuluku
ARVIND PANDISELVAM NA.MUTHUKUMAR YUGA BARATHI
ILAYAKAMBAN SANJEEV KANNA KUMARESAN PARTHIPAN

MUTRAM - Tamil & English Fortnightly R.Dis. No. 1195-2010 RNI No. TNBIL/2010/36924

